Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-1147)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 16 (17.07.2003) வியாழக்கிழமை இதழ்: 288

# முதல் தாக்குதலணி தளபதிக்கு தலைவர் பிரபாகரன் அஞ்சலி!

விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் அணித் தளபதி லெப். சீலனின் 20 ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்றுமுன்தினம் நடைபெற்ற நினைவு நிகழ்வில், அம் மாவீரனின் திருவுருவப்படத்திற்கு, தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

வன்னியில் - விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இடம் ஒன்றில், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிப் போராளி காண்டீபன் தலைமையில், லெப்.சீலனின் 20 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

லெப்.சீலனின் திருவுருவப்படத்திற்கு. அவரின் தாயார் ஈகச் சுடர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியிலிருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தளபதிகளுக்கு விடுதலைப் புலிகளின் தளபதிகள் சுடர்களை ஏற்றிவைத்தனர்.

சிறப்புரையினை படையணிப் போராளி அமுதாப் நிகழ்த்தினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



தாக்குதலணித் தளபதிக்கு அஞ்சலி செலுத்தும் தலைவர், அருகே லெப்.சீலனின் தாயார்.



லெப்.சீலனின் திருவுருவப் படத்திற்கு முன்பாக ஈகச்சுடரேற்றும் தலைவர் பிரபா.



தளபதிகள், முக்கிய பிரமுகர்களுடன் அஞ்சலி செலுத்துகிறார் தலைவர்.

# கடல் மோதல்கள் குறித்து சூசை - ரெலவ்சன் சந்திப்பு!

## எதிர்நோக்கும் பிரச்சினைகளை புலிகள் எடுத்துரைப்பு

(முல்லைத்தீவு)

**கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையை, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன் நேற்றுச் சந்தித்து, கடல் மோதல்கள் குறித்துக் கலந்துரையாடினார்.**

வன்னிக்கான தனது மூன்று நாள் பயணத்தின் இறுதி நாளான நேற்று, முல்லைத்தீவுக்குப் பயணம்செய்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன் தலைமையிலான குழுவினர், அங்கு கடற்புலிகளின் தளபதி கேணல் சூசையைச் சந்தித்து உரையாடியதுடன் முல்லைத்தீவின் மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடினர்.

காலை 10 மணியளவில் முல்லைத்தீவு நகரைச் சென்றடைந்த ரெலவ்சன், 10.15 மணியளவில் முல்லைத் தீவிலுள்ள கடற்புலிகளின் அலுவலகத்தில், கடற்புலிகளின் தளபதி கேணல் சூசையைச் சந்தித்து உரையாடினார்

இச்சந்திப்பின்போது -

கடற்புலிகளின் துணைத்தளபதி லெப்.கேணல் செழியன், தாக்குதல் தளபதி லெப்.கேணல் சிறிராம் மற்றும் சமாதான

(10 ஆம் பக்கம் பார்க்க)



கடற்புலிகள் படகொன்றில் ரெலவ்சனுடன் கேணல் சூசை.

# ஐரோப்பிய அமைதிப் படையினர் வருட இறுதியில் இலங்கைக்கு!

## 2005 ஆம் ஆண்டுவரை பணியாற்றுவர்

(கொழும்பு)

ஐரோப்பாவைச் சேர்ந்த வன்முறை சாராத அமைதிப் படையினர் (Non Violent Peace Force) ஐம்பது பேரை, இலங்கையில் அமைதிப் பணியில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் இலங்கை வரவுள்ள இவர்கள், 2005 ஆம் ஆண்டுவரை இங்கு கடமையில் ஈடுபட்டிருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில், அமைதி முயற்சியில் ஈடுபடுவோருக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் இலங்கையின் அமைதி முயற்சிக்குப் பங்களிக்கும் அதேவேளை, உலகின் ஏனைய பகுதிகளின் அமைதி முயற்சிகளுக்கும் - இங்குள்ள அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல் ஆகிய நோக்கங்களுடன் இந்தக் குழு செயற்படவுள்ளது.

'பவ்ரல்' அமைப்புடனும், வடபகுதியில் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்துடனும் இணைந்து செயற்படவுள்ள இந்த அமைப்பு, நாடு முழுவதும் 16 இடங்களில் செயற்படும் எனத் தெரியவருகிறது.

## இலங்கைக்கான நிதியுதவி அதிகரிப்பு

இலங்கைக்கு வழங்கும் நிதித் தொகையை, இன்னும் 200 மில்லியன் டொலர்களால் அதிகரித்திருப்பதாக உலகவங்கி நேற்று அறிவித்துள்ளது. உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரால்ட் இதுபற்றிக் கூறுகையில், இலங்கைக்கு, தொடரும் 4 வருடங்களுக்காக மொத்தமாக வழங்குவதற்கு இணங்கப்பட்டுள்ள ஒரு பில்லியன் வட்டியில்லா நீண்டகாலக் கடனை, இன்னும் 200 மில்லியன் டொலர்களால் உயர்த்துவதற்கு உலக வங்கி இணங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

## விண்ணாணம் விநாசியர்



வருது வருது எண்ட வரைவு வந்தாத்தான் உண்மை!

## வன்னியிலிருந்து திரும்பியதும்

# ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கின்றார் ரெலவ்சன்

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

மூன்று நாட்கள் வன்னியில் தங்கியிருந்து, விடுதலைப் புலிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பின்னர் - அங்கு பேசப்பட்ட விடயங்கள் குறித்து, இன்று பிரதமருடன் அவர் ஆராயவுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து நேற்று மாலை கொழும்பு திரும்பிய ரெலவ்சன் - பிரதமர் தவிர, பாதுகாப்பு அமைச்சர் உட்படப் பலதரப்புக்களுடனும் பேச்சு நடத்தவுள்ளார்.

கடற்கண்காணிப்பு விடயத்தில் புதிய நடைமுறைகளைப் பின்பற்றுதல் தொடர்பான திட்டவரைபு குறித்தும், இது தொடர்பான விடுதலைப் புலிகளின் கருத்துக்கள், கோரிக்கைகள் தொடர்பாகவும், இவ்விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்னவென்பது பற்றியும் பிரதமருடனான இன்றைய சந்திப்பில் ஆராயப்படவிருக்கிறது.

மேலும் - குரங்குப்பாஞ்சான் பகுதியில் உள்ள புலிகளின் முகாம் குறித்தும் இன்றைய பேச்சுக்களில் ஆராயப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. (200)

# இடைக்கால நிர்வாக வரைபு; புலிகளிடம் இன்று கையளிப்பு?

விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கிணங்க, புதிதாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாக அலகுத் திட்டத்தை, நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் - விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனிடம், கிளிநொச்சி சமாதான அலுவலகத்தில் வைத்து இன்று கையளிப்பார் என்று அரச தரப்பிலிருந்து அறியவருகிறது.

இப்புதிய திட்டம், வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்திற்கு, அரசியல் உரிமைகளையும், புனரமைப்புக்கான சர்வதேச நிதியை நேரடியாகக் கையாளும் தகைமையையும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

## விரைவில் நியமனம் கிடைக்கும் !

மாகாண சபைகளின் கீழுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு நூற்றுப்பத்து ஆயுள்வேத வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக ஆயுள்வேத ஆணையாளர் அசோக மந்தனகே தெரிவித்தார்.

போட்டிப் பரீட்சை மூலம் இந்த ஆயுள்வேத வைத்தியர்கள் தெரிவு செய்யப்பட்டு, நியமனங்கள் வழங்கப்படவுள்ளது. ஆயுள்வேத பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா முடித்தவர்களிலிருந்து இந்த நியமனங்களுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

கிராமப்புறங்களிலுள்ள வைத்தியசாலைகளிலேயே இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், ஆயுள்வேத ஆணையாளர் அசோக மந்தனகே மேலும் தெரிவித்தார்.

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள GJ0381 இலக்கமுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சக ஒழுங்கை, 114/19 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (T.P -2789)

## நீதிமன்ற பதிவாளர் விளக்கம்

சிறுமியை வல்லுறவுக்குட்படுத்த முயன்ற ஐந்து பேர் அகப்பட்டனர் என்ற தலைப்பில் 2003-06-04 இல் வெளியான செய்தி தொடர்பாக, யாழ்ப்பாணம் நீதிவான், நீதிமன்றப் பதிவாளாரின் விளக்கம் வருமாறு,

ஆனைக்கோட்டை வீதி,கொக்குவிலைச் சேர்ந்த சிறுமியை - அதேயிடத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பலாத்காரமாக அழைத்துச் சென்று, பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றுள்ளனர் என்றும், அச்சிறுமி கூச்சலிடவே அயலவர்களினால் மேற்படி ஐவரும் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் ஐந்து சந்தேகநபர்களையும் கைது செய்து யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, இவர்கள் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார் என்ற செய்தி பற்றி-

மேற்படி சம்பவம் தொடர்பாக, குறித்த தினத்தில் நீதிமன்றத்தில் யாழ். பொலிஸாரினால் எவ்வித தகவல் அறிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை என்றும், எவரும் ஜுன் 28ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ள பதிவாளர்,

இதேவேளை - கொக்குவிலைச் சேர்ந்த சிறுவயதுப் பெண்பிள்ளையை, வீட்டினுள் புகுந்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த எத்தணித்தமை தொடர்பான வழக்கில் அழைக்கப்பட்டு பிரர்து அணைக்கப்பட்ட போது, இந்த வழக்கின் நான்கு எதிரிகளும் சமுகமளித்திருந்தனர் என்றும், ஐந்தாவது எதிரி மன்றுக்குச் சமுகமளிக்காமையினால், அவருக்கு- யாழ்.பொலிஸார் ஊடாக அழைப்புக் கட்டளை அனுப்புமாறு கட்டளையிட்டு, இந்த வழக்கு 26.06. 2003 இற்குத் தவணையிடப்பட்டது எனவும் தெரிவித்தார்.

## கமநல சேவைத் திணைக்களத்தின் மூலமாக இலகு கடன் அடிப்படைத் திட்டத்தின்கீழ் கிராமிய பொருளாதார அமைச்சின் அனுசரணையுடன் இந்திய தயாரிப்பு நான்கு சில்லு உழவு இயந்திரம் சலுகை விலையில் விற்பனை

| சலுகை விலையில் தெரிவு செய்யும் 4 சில்லு உழவு இயந்திர வகை | அமைப்பும், வலுவும் | விற்பனை விலை (ரூபா) | சலுகை விலை (ரூபா) |
|---|---|---|---|
| ரேப் (TAFE) | 45 DI HP 47<br>3 சிலிண்டர் | 795500 | 485000 |
| மகேந்திரா (MAHINDRA) | 575 DI HP 45<br>4 சிலிண்டர் | 750000 | 620000 |
| ஜோன்பீறி (JOHN DEERE) | L&T JD5203 HP 47<br>4 சிலிண்டர் | 830000 | 650000 |

நீங்கள் தெரிவுசெய்யும் உழவு இயந்திரத்தை கொள்வனவு செய்ய விரும்புவோர் சலுகை விலைத் தொகையை 48 மாதங்களில் கீழ்க்காட்டப்பட்ட தவணை அடிப்படையில் வட்டியின்றி, தவணைப் பணத்தை செலுத்தி உங்கள் சொத்தாக்கிக் கொள்ளலாம்.

| தெரிவு செய்யும் இயந்திர வகை | சலுகை விலையை மாதாந்த அடிப்படையில் செலுத்துதல் ரூபா |
|---|---|
| ரேப் (TAFE) | 12530 |
| மகேந்திரா (MAHINDRA) | 16015 |
| ஜோன்பீறி (JOHN DEERE) | 16625 |

விபரங்களுக்கும் வேண்டிய தகவல்களுக்கும், யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தை 20.07.2003 இற்கு முன் நாடுங்கள். இதற்கான விண்ணப்ப முடிவு திகதி 21.07.2003 என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுந்தரேசன்,
உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தி திணைக்களம்,
யாழ். மாவட்டம்.

(சி/1241)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி
நடித்த A.V.M இன்

10.30, 2.30, 6.30.9.30
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
இயக்கம்: விக்ரமன்

நிறஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன்
நடித்த
பாறை
(சி-1338)
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)
THE LORD OF THE RINGS

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி ஜிரோமி

டயஸ் - துஸ்யந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜிரோமி தனது மூன்றாவது பிறந்த நாளை இன்று இத்தாலியில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை தாத்தா (இராசா ஹாட்வெயர்), அம்மம்மா, சித்தி, அத்தைமார், மாமா, சித்தப்பா எல்லோரும் சகல சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்
தாத்தா -ரவி (கொழும்பு)

(சி-1240)

## பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ்கள், பிற தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் 2003.07.25 ஆம் நாள் நேரில் வருகை தரவும்.

பணிநிலை : எழுதுநர்

கல்வித்தகைமை : க.பொ.த (உ/த) வணிகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

நடுவப் பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

(சி-1243)

மாபெரும் புத்தகம் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

புத்தகம் புத்தகம்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள புத்தகக் கடல். 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினிப் புத்தகங்கள். ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரங்களும் ரூபா 10/= - ரூபா 100/= வரை பெற்றுக்கொள்ளலாம். இவைதவிர எம்மிடம் பாடசாலை, அலுவலக உபகரணங்களும், பாடசாலை அழி பொருட்கள், மூலப் பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைக்களுக்கு இலவச விநியோகசேவை. உங்கள் தேவை எதுவானாலும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

(சி-1148) 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2225542

# கண்காணிப்புக் குழுவினர் எப்பொழுதுமே விடுதலைப் புலிகள் பக்கமே பேசுகின்றனர்!

## மாதுளுவாவே சோபித தேரோ சீற்றம்

ஆயுதம் தாங்கிய அமைப்பொன்றிடம் எவ்வாறு இடைக்கால நிர்வாகத்தைக் கையளிக்கமுடியும் என்று கேள்வி எழுப்பினால், இனவாதிகள் என்று எமக்குப் பட்டம் சூட்டுகிறார்கள். சமாதானத்துக்கு விரோதிகள் என்று கூறுகிறார்கள் என மாதுளுவாவே சோபித தேரோ சீற்றத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இவர் மேலும் தொடர்ந்து கூறுகையில் -

கண்காணிப்புக்குழுவினர் யாரைக் கண்காணிக்கின்றனர் என்று தெரியவில்லை. எல்லா விடயத்திலும் புலிகளின் பக்கமே பேசுகின்றனர். வெளிநாட்டு அதிகாரிகளைக் கண்காணிப்புக்குழுவில் இணைத்துக்கொண்டது, பாரபட்சமின்றி யுத்தநிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கேயாகும்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ச்சியாகக் கொலை செய்யப்பட்டுவருவது குறித்து, இவர்கள் ஒன்றுமே செய்யவில்லை. ஆனால், புலிகளுக்கு எது நடந்தாலும் இவர்கள் தட்டிக்கேட்கின்றனர்.

அனைத்து இனங்களினதும் மனித உரிமைகள் பற்றிப் பேசுபவர்கள் - சிங்கள மக்களின் உரிமைகளைப் பற்றிப் பேசுவதில்லை. ஏன், சிங்களவர்கள் என்ன மாடுகளா? இதன்மூலம் பௌத்தர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. அரசாங்கம் - புலிகளுடன் கடந்த ஒன்றரை வருடங்களாகப் பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. ஆனால், இதுவரை அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசவில்லை. புனர்வாழ்வைப் பற்றி மட்டுமே பேசப்பட்டது.


இருபது வருடகால யுத்தத்தில் நாம் ஒன்றை மட்டும் புரிந்துகொண்டோம். இந்த யுத்தத்தில் இருதரப்பிலும் வெற்றி கொள்ளமுடியாது. இந்த யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது மட்டுமே பெறுபேறாகும்.

கட்சி அரசியல் உள்ளவரை நாடு உருப்படாது. பொதுவான இணக்கப்பாடு இல்லாமல், இரண்டு கட்சிகளுமே புலிகளுக்கு நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்கப் போகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பொதுவான இணக்கப்பாடு ஒன்றுக்கு வரவேண்டும். அவ்வாறு பொதுவான இணக்கப்பாட்டுக்குள் வந்ததும், புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்கவேண்டும்.

நாட்டைப் புலிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதைத் தடுப்பதற்கு, இதுவே இரண்டு பிரதான கட்சிகளினதும் பிரதான பொறுப்பாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





அல்லாரையில் லெப். சீலனின் நினைவுத் தூபித் திறப்பு விழாவில், ஈகச் சுடரை யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றுவதை முதலாவது படத்திலும், வீரவேங்கை ஆனந்தின் திருவுருவப் படத்தினை, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:ராஜ்குமார்)

# புலிகளின் ஒத்துழைப்புடனேயே வன்னியில் புனரமைப்பு பணிகள்

## வவுனியாவில் அமைச்சர் ஜெயலத் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருவதன் மூலம், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கவுள்ள நிதியைக் கொண்டு, வன்னிப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யமுடியும் என, புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் விவகார அமைச்சர் டொக்டர் ஜயலத் ஜயவர்த்தன வவுனியாவில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடைய ஒத்துழைப்புடன், அவர்களுடைய ஆலோசனையின் பிரகாரம்தான், போரினால் சேதமடைந்துள்ள வடக்கு - கிழக்கு பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டும் என்பது, அரசின் நிலைப்பாடு எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வவுனியா - பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்களுக்கு, போஷாக்கு உணவுப் பொதிகளைப் பகிர்ந்தளிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, நான்கு சுகாதார வைத்திய பணிமனைகளிலுமுள்ள, 43 நிலையங்கள் ஊடாக மாதாந்தம் இந்தப் போஷாக்கு உணவுப் பொதிகள் விநியோகம் இடம்பெறும் என, மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

உலக உணவுத்திட்டத்தின் மூலம், இந்தப் போஷாக்கு உணவு விநியோகிக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### ஊனமுற்றோர் தின நிகழ்வுகள்

(வண்ணை)

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவால் பிரகடனப்படுத்தப்பட்ட ஊனமுற்றோர் தினநிகழ்வு, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வுகளைத் தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பொருட்கள் வழங்கப்படும்.

### கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேசசபையும், கரவெட்டி சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடாத்தும் சனசமூக நிலையங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள், இன்று கரணவாய் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் 17 சனசமூக நிலைய அணிகள் மோதவுள்ளன.



திருமலையில் இடம்பெற்ற லெப். சீலன் நினைவுநாள் நிகழ்வில், அவரது திருவுருவப் படத்திற்குச் சகோதரர் மலர்மாலையை அணிவிக்கிறார்.

## திணைக்களங்கள், அமைச்சுகளில் இருப்போரை

# நிதியமைச்சின் செயலாளரும், அதிகாரிகளும் முட்டாள்கள் என நினைத்துக் கொள்கின்றனர்!

## அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க பாய்ச்சல்



(கொழும்பு)

நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் சிந்திக்காமல், நிதியமைச்சின் அதிகாரிகள் செயற்படுவார்களேயானால், நாம் அமைச்சுப் பதவிகளை வகிப்பதில் எந்தவித அர்த்தமும் கிடையாது என்று விவசாய, கால்நடை அபிவிருத்தி, சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

பேராதனை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற - கால்நடை பரிபாலன பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் -

எனது அமைச்சில் நிலவும் நிதிப் பற்றாக்குறையை நீக்கும்வகையில், நிதியமைச்சின் அதிகாரிகள் எந்தவிதக் கரிசனையும் கொள்ளாததால், இது பற்றிப் பிரதமருக்கு அறிவித்துவிட்டு, அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்கு ஆயத்தமாகி வந்தேன்.

அரசாங்க திணைக்களங்களிலும், அமைச்சுக்களிலும் இருப்போர் முட்டாள்கள் என - நிதியமைச்சின் செயலாளரும், அதிகாரிகளும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் நலனின் எவ்வித கரிசனையும் கொள்ளாமல், எனது அமைச்சின் அபிவிருத்தி வேலைகளுக்கான நிதியை வழங்காமல், தட்டிக்கழித்த போதுதான் எனது அமைச்சர் பதவியைத் துறக்கவும் தயாராகினேன்.

எனது இரண்டு அமைச்சுக்களுக்கும் தேவையான நிதியை ஒதுக்கித்தரப் பிரதமர் தலையிடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பிரச்சினை தீர்ந்துவிட்டதால் தொடர்ந்தும் அமைச்சுப் பதவியிலிருப்பேன் என்றும், அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

# மன்னார் கடற்பரப்பில் கைதான 26 தமிழக மீனவரும் விடுவிப்பு!

## இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி கடற்தொழில் ஈடுபட்டிருந்த வேளையில் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த 26 இந்திய மீனவர்களும் நேற்றுமுன்தினம் இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி, தலைமன்னார் கடலில் அத்துமீறித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை, கடற்படையினரால் 26 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்த ஆறு இழுவைப் படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைதான அனைவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவேளை, இவர்களைச் சொந்தநாட்டுக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்ட 26 இந்திய மீனவர்களும், ஆறு இழுவைப்படகுகளும் பாக்குநீரிணையில் வைத்து, நேற்றுமுன்தினம் இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை, கடந்த மே மாதம் இந்தியக் கடற்பரப்பில், கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த போது கைதான இலங்கை மீனவர்கள் இரண்டு பேரும், அவர்களின் இரண்டு மீன்பிடிப் படகுகளும் இந்தியக் கடற்படையால் - இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (201)

# தாப்ரூ கொலை வழக்கின் சந்தேகநபரை நீதிமன்றுக்கு கொண்டுவருவது ஆபத்தாம்!

## நீதிவானிடம் பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

தெஹிவளை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சுனில் தாப்ரூ கொலை வழக்கின் சந்தேகநபரான, தமிழ் இளைஞனை நீதிமன்றத்துக்கு அழைத்துவருவதற்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகவும்,

இதனால், வெலிக்கடைச் சிறைச்சாலையிலேயே இவர் மீதான, விளக்கமறியல் உத்தரவை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும், பொலிஸார் விடுத்த கோரிக்கையைக் கல்கிசை நீதிவான் முகமட் மக்கீ நிராகரித்தார்.

இது தொடர்பாக, மேலும் தெரிய வருவதாவது -

சுனில் தாப்ரூ கொலை வழக்கின் சந்தேகநபரான செல்லத்துரை கிருபாகரன் என்ற தமிழ் இளைஞனை, ஒவ்வொரு வழக்கு விசாரணைக்கும், நீதிமன்றத்துக்கு அழைத்துவருவது அவரது உயிருக்கு ஆபத்தானது எனவும், இதனால், வெலிக்கடைச் சிறைக்கு வந்து இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை விளக்கமறியல் உத்தரவை நீடிக்க வேண்டும் என்றும், கல்கிசை நீதிவானிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

பொலிஸாரின் இந்தக் கோரிக்கையை, சந்தேகநபரின் சட்டத்தரணியான ஸ்ரீகாந்தா எதிர்த்து வாதிட்டார்.

வெலிக்கடைச் சிறைக்கு நீதிவான் சென்று, விளக்கமறியலை நீடிப்பது - குறிப்பிட்ட சந்தேகநபரின் சட்டரீதியான - அரசியலமைப்பு உரிமைகளை மீறுகின்ற செயல் என்றும்,

ஜனாதிபதி சந்திரிகா கொலை முயற்சி தொடர்பான வழக்கே திறந்த நீதிமன்றத்தில் நடைபெறும்போது, முன்னொருபோதும் இல்லாதவாறு பொலிஸார், இத்தகைய கோரிக்கையை முன்வைப்பதை எதிர்ப்பதாகவும், சட்டத்தரணி ஸ்ரீகாந்தா வாதிட்டார்.

அத்துடன் - சந்தேகநபருக்கு உரிய பாதுகாப்புக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை என்றும், அவர் தெரிவித்ததையடுத்து,

சந்தேகநபர் மீதான விளக்கமறியலை நீடித்த நீதிவான், 29 ஆம் திகதி இவரைக் கல்கிசை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு உத்தரவிட்டார்.

முன்னதாக, இந்தக் கொலை வழக்கின் சந்தேகநபரான கிருபாகரன், கல்கிசை நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் சந்திராணி சிவபாதம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டார்.

15 பேர் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டபோது - நான்கு சாட்சிகளில் மூவர், சந்தேகநபரை அடையாளம் காட்டினர்.

அடையாள அணிவகுப்புக்காக நிறுத்தப்பட்ட அனைவரும், சந்தேகநபரைவிட உயரம் குறைவாக இருப்பதையும், சந்தேகநபரின் புகைப்படம் - பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டது குறித்தும், சட்டத்தரணி ஸ்ரீகாந்தா மேலதிக நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்ததும் குறிப்பிடத்தக்கது.

# சித்தமருத்துவ மாணவர் போராட்டம்;

# நிர்வாகச் செயற்பாடுகள் முடக்கம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறையை நிறுவனமயமாக்க எடுக்கப்படும் முயற்சியை எதிர்த்து, கடந்த எட்டாம் திகதிமுதல் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்த சித்தமருத்துவத்துறை மாணவர்கள் - இந்தப் போராட்டத்துக்குச் சாதகமான பதில் எதுவும் கிடைக்காதநிலையில், நிர்வாகத்தை இயங்கவிடாது முடக்கிவைத்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தால்- கடந்த திங்கட்கிழமைமுதல் சித்தமருத்து பீட நிர்வாகம் செயற்படாதுள்ளது.

இந்தப் போராட்டத்தின் பின்னரும் தமக்குத் தகுந்த தீர்வு தரப்படாவிடின், போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளவிருப்பதாகவும், பொதுமக்கள் தமது போராட்டத்துக்குத் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டுமெனவும் - சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.




சித்தமருத்துவத்துறை மாணவர்களின் போராட்டத்தினால் பீடத்தின் முன்வாயில் மூடப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.
(படம் - ராஜ்குமார்)

### மிதிவெடிகளால் பாதிக்கப்பட்டோருக்கு சுயதொழில் கடன்

மிதிவெடியால் பாதிக்கப்பட்ட 64 பேருக்கு சர்வோதய நிறுவனம் - சுயதொழில் முயற்சிக்கென, தலா 12 ஆயிரம் ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன், இந்தக் கடன்திட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது எனவும், இதன் முதற்கட்டமாக- யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டு, கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், சர்வோதய நிறுவனத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (43)

# ஆசிய வைத்தியர்கள் அமைப்பு குடாநாட்டு உதவிப் பணிகளில்!

## அதிகாரிகள் நேரில் ஆராய்வு

ஜப்பானில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் ஆசிய வைத்தியர்கள் சங்கம் - அம்டா (AMDA), யாழ்.குடாநாட்டில் பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அதன் செயற்திட்ட இணைப்பாளர் டாட்சுயாமேன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அம்டா குழுவினர்- நேற்றுமுன்தினம் காலை அரச அதிபர், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் கரையோரப்பகுதிகள், நலன்புரி நிலையங்கள், பாடசாலைகளுக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர்.

தற்போது- கொழும்பு, வவுனியா, அம்பாந்தோட்டை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அம்டாவின் செயற்திட்டங்கள், இந்தமாதம் முதல் குடாநாட்டின் பின்தங்கிய பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளன. ஆரம்ப சுகாதாரம், பாடசாலை சிறுவர்களிடையே சுகாதார விழிப்புணர்வு, நடமாடும் மருத்துவசேவை போன்ற சேவைகள் இந்தத் திட்டத்தின்கீழ் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவினருடன் ஜப்பான் தூதரகத்தைச் சேர்ந்த இரண்டாவது செயலாளர் கென்ஜி மியாட்டாவும் வருகை தந்திருந்தார்.

யாழ்.குடாநாட்டில், சென்.ஜோனஸ் அம்புலன்ஸின் ஒத்துழைப்புடன் இடம்பெறவுள்ள, இந்தத் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக ஜப்பான் சுகாதார அமைச்சர் தலைமையிலான குழுவினர் விரைவில் யாழ். வரவுள்ளதாக, சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் பதில் மாகாண ஆணையாளர் ரி.ஜெயரட்ணம் தெரிவித்தார். (111)

### மாணவிகளிடம் சேட்டைவிட்டதை

## தட்டிக்கேட்ட குடும்பஸ்தர் மீது இளைஞர் குழு கத்திக்குத்து!

வீதியால் சென்ற மாணவிகளிடம் சேட்டைவிட்ட இளைஞர்களைத் தட்டிக்கேட்ட குடும்பஸ்தர், கத்திக்குத்துக்கு இலக்கானார்.

நேற்றுமாலை 5.45 மணிக்கு அரியாலை கனகரத்தினம் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் சின்னையா கிருஷ்ணபிள்ளை (வயது 47) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்காகி, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தனியார் கல்விநிலைய வகுப்புக்களை முடித்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த மாணவிகளை வழிமறித்து, அவர்களுடன் தகாதவார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்த இளைஞர்களை எச்சரிக்கை செய்தபோது, ஆத்திரமடைந்த இளைஞர்கள் இவரைக் கத்தியால் குத்தியதாகத் தெரியவருகிறது. (121)

### பூநகரிப் பகுதியில்

# நிரந்தர கட்டடமின்மையால் வைத்திய சேவைகள் பாதிப்பு!

(ஆழியவளை)

பூநகரிப் பிரதேசத்தில் வைத்திய சேவைகளை மேற்கொள்வதற்கு நிரந்தரமான கட்டடம் இல்லாமையினால், மருத்துவசேவைகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திலீபன் நடமாடும் மருத்துவ சேவையினராலும், முழங்காவில் வைத்தியசாலையினராலும் - புதன், சனி ஆகிய நாட்களில் இங்கு வைத்தியசேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இச்சேவைகள் நடைபெறும் கட்டடத்தில்- பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் காரியாலயம், வாகனத்தரிப்பிடம், மொத்த வியாபார நிலையம், கிராமிய வங்கி என்பன இயங்குவதால், நோயாளர்களுக்குச் சிகிச்சை மேற்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. (122)

## வெற்றிலைக்கேணிப் பகுதியில் மிதிவெடி அகற்றும்பணி ஆரம்பம்!

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு - வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையில் சுமார் 100 பேர் பங்குபற்றுகின்றனர்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு முகாமைத் தக்கவைப்பதற்காக, கடல்மார்க்கமாகத் தரையிறங்கிய படையினர், இங்கு பாரிய முகாமை அமைத்து, 2000 ஆம் ஆண்டுவரை நிலை கொண்டிருந்தனர்.

மக்கள் இந்தப் பிரதேசத்தில் மீளக் குடியேறியுள்ளபோதும், இராணுவ முகாம் அமைந்துள்ள சில பகுதிகள் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாக இருந்தன. இப்பகுதியிலேயே கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (122)

### சட்டவிரோத இறைச்சி அழிப்பு

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பல்வேறு இடங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை - போயா தினத்தன்று சட்டவிரோதமாக, விற்பனை செய்யப்பட்ட 120 கிலோ மாட்டிறைச்சியை, மாநகரசபையின் பொது சுகாதார பரிசோதகர் மற்றும் கொல்கள மேற்பார்வையாளர் ஆகியோர் கைப்பற்றி அழித்தனர்.

வாழ்க வளமுடன்

1½ HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் - வா.கார்த்திகா
முகவரி - இணுவில் தெற்கு, இணுவில்.

இரண்டாவது அகவையில்



பெயர். - வே.வவிஷா
முகவரி - குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

மூன்றாவது அகவையில்



பெயர் - ட.ஜிரோமி
முகவரி - இத்தாலி.

மூன்றாவது அகவையில்



பெயர் - பா.விதுஷன்
முகவரி - நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

ஆறாவது அகவையில்



பெயர் - ந.துலக்ஷன்
முகவரி - லயன்ஸ் கிளப் றோட் வத்தளை.

ஒன்பதாவது அகவையில்



பெயர் - ச.சாகித்தியா
முகவரி - கண்டாவளை, பரந்தன்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# விடாமுயற்சியே எனது மூலதனம்;

உழைப்போம் உயர்வோம்! தொழில் மலர்



அருள்ராசா

அப்போது அவருக்குப் பதின்ம வயதுப் பருவம் ஆரம்பித்திருந்தது. குடும்ப வருமானம் மிகக்குறைவு. ஏதாவது தொழில் செய்து குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் நாளுக்குக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தது.

வியாபாரம் செய்வதற்கு நிதிவசதி எதுவும் கைவசம் இருக்கவில்லை. கடின உழைப்பும், விடாமுயற்சியும் மட்டுமே அவர் வசமிருந்த பெறுமதிமிக்க மூலதனம். இந்த மூலதனத்தில் நம்பிக்கை வைத்துச் சிறியளவில் பழ வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார்.

யாழ்.கொட்டடியைச் சேர்ந்த அந்தச் சுறுசுறுப்பான மனிதன் அருள்ராசாவுக்கு இப்போது வயது ஐம்பத்து மூன்றைத் தாண்டிவிட்டது. பதின்ம வயது முதல் இன்று வரையான இடைப்பட்ட காலம் முழுவதும், இவரின் தொழில்- பழவகைகளை வியாபாரம் செய்வதுதான். இந்த வியாபாரத்தின் அத்தனை சூட்சுமங்களும் இவருக்கு அத்துபடி. இப்போது, யாழ்.நகரின் மத்தியில் இவரின் பழக்கடை. யாழ்.நகரம் சுறுசுறுப்படையும்போது, இந்தக் கடையிலும் வியாபாரம் விறுவிறுப்படையும். சுயமுயற்சியும், தன்னம்பிக்கையும் இருந்தால், எந்தத் தொழிலிலும் முன்னேற்றமடையலாம் என்பதற்கு, இவரின் கடந்தகாலம் சாட்சிகூறும்.

ஓர் இனிமையான மாலைப்பொழுதில், அவரது பழக்கடை வாயிலில் அவரைச் சந்தித்தோம். தனது அனுபவங்கள் குறிதது, மனந்திறந்து பேசினார்.

எனது குடும்பத்தில் நிலவிய வறுமை காரணமாக - பன்னிரண்டாவது வயதிலே இந்தத் தொழிலைச் செய்ய ஆரம்பித்தேன். பழக்கடை வியாபாரத்தைக் குறைந்த முதலீட்டுடன் ஆரம்பிக்க முடிந்தமையே, நான் இந்தத் தொழிலுக்கு வருவதற்கான காரணமாகும். எனது சொந்த இடம் யாழ்ப்பாணம் கொட்டடி. இதனால், இங்கேயே தொழில் செய்ய ஆரம்பித்தேன். நான் ஆரம்பத்தில் பெரியகடையின், பழைய கட்டடத்தில் எனது கடையை நடத்திவந்தேன். அப்போது நடைபெற்ற கலவரங்களினால், அந்தக் கட்டடத் தொகுதி முற்றாகச் சிதைவடைந்துவிட்டது. இதற்குப் பின்னர், நான் மரக்கறி வியாபாரத்தைச் செய்துவந்தேன்.

இந்த வியாபாரங்களினால் கிடைக்கும் இலாபத்தில், ஒரு மாதிரி குடும்பத்தைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. எனக்கு எட்டுப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

மரக்கறி வியாபாரம் செய்யும்போது - மரக்கறி மூடைகளை, சைக்கிள் மூலமாகத்தான் சந்தையிலிருந்து கட்டிக்கொண்டு வருவது வழக்கம்.

நான் ஒரு குறப்பிட்ட காலம் கொக்குவிலில் இருந்தேன். இதனால், கொக்குவில் சந்தையிலே மரக்கறி வியாபாரத்தைச் செய்தேன்.

பின்னர் - 1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வினால், கிளிநொச்சிக்குச் சென்று அங்கும் பழ வியாபாரம் செய்தேன். பின்னர், கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து, பாண்டியன் குளத்துக்குக் குடும்பத்துடன் சென்றோம். இங்கு வியாபாரம் செய்வதற்கேற்ப சூழ்நிலை மற்றும் பொருளாதாரம் என்பன இல்லாததால், வியாபாரம் செய்யமுடியவில்லை.

சில காலத்தின் பின்னர் - மக்கள் எல்லாம் திரும்பிவரும்போது, நாமும் யாழ்ப்பாணத்துக்கு வந்து, மீண்டும் எனது பழ வியாபாரத்தை ஆரம்பித்தேன்.

பழங்களைக் கொழும்பிலிருந்து கொண்டு வந்து மொத்தமாக விற்பனைசெய்யும் ஒருவரிடமிருந்தே, நான் பழங்களைக் கொள்வனவு செய்கிறேன்.



# மனம் திறந்து பேசும் அப்பிள் வியாபாரி

பழ வியாபாரத்தில் ஒரு சீசனில் இலாபம் வரும். ஒரு சீசனில் நட்டம் வரும். அநேகமாக வெயில் காலத்தில்தான் பழங்கள் அதிகமாக விற்பனை செய்யப்படும். ஆனால், இப்போது அப்பிள் விலை அதிகமாக இருபபதால், வியாபாரம் சற்றுக்குறைவுதான். பழங்கள் மலிந்தால், வியாபாரமும் நன்றாக நடைபெறும். அதிக இலாபமும் கிடைக்கும்.

நான் பஸ் நிலையத்துக்கு அருகில் கடை வைத்திருப்பதால், அநேகமாகப் பயணிகள்தான் பழங்களைக் கொள்வனவு செய்கின்றனர். அத்துடன், வைத்தியசாலைக்குச் செல்பவர்கள் மற்றும் தூரஇடங்களிலிருந்து வருபவர்களும் பழங்களை அதிகமாக வாங்குவார்கள்.

நீண்டகாலமாக இந்தத் தொழிலைச் செய்து வருவதால், பல சுவையான அனுபவங்களைக் கண்டுள்ளேன். அதாவது, சிலபேர் பழங்கள் என்ன விலை என்று கேட்டுவிட்டு, முந்திரிப் பழம் என்றால் ஒவ்வொன்றாகப் பிடுங்கிச் சாப்பிட்டுவிட்டு, பக்கத்துக் கடையில் மலிவாக இருக்கு, அங்கு விலைகுறைவு என்று சொல்லிவிட்டு, வாங்காமல் சென்றுவிடுவார்கள். சிலர் பேர் அப்பிள் பழங்களைக் கையால் அமத்திப் பார்த்துவிட்டு, இது சறியதாக இருக்கிறது, உள்ளுக்குள் கரைந்த மாதிரி, அழுகலாக இருக்கிறது என்று சொல்லிவிட்டுப் போவார்கள்.

இவ்வாறு நாளாந்தம் பல பேரைக் காண்கிறோம். வியாபாரம் என்றால் இப்படித்தான் இருக்கும். என்றாலும், இப்படியான தொழிலைச் செய்து பார்த்தால்தான் அதிலுள்ள கஷ்டம் தெரியும்.

எனக்கு இப்போது உடம்பு இயலாமல் வந்துவிட்டது. இதனால், இனித்தொழிலைப் பெரிதாக்குகின்ற நோக்கமில்லை. ஏனென்றால், என்னுடைய பிள்ளைகளும் வெவ்வேறு தொழில் செய்கிறார்கள். இதனால், நான் தனிய இந்தத் தொழிலைச் செய்ய இயலாது. அத்துடன், என்னால் இயலக் கூடியளவு தொழிலைச் செய்து, நாளாந்தம் ஏதாவது வருமானம் வந்தால்போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டேன் என்றார்.

சந்திப்பு:
கணேஷ், லிவிங்ஸ்டன்.


# காற்றாலை மின் உற்பத்தி

பல ஆண்டுகளுக்கு முன்னரேயே குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளில் காற்றாடியின் இயக்கசக்தியினால் ஆறு, குளம், கிணறுகளிலிருந்து வயல் நிலங்களுக்கு நீரிறைக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. அண்மைக்காலங்களில் புகுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்களில், காற்றாடியினை இலகுவாகச் சுழலச்செய்தல் சாத்தியமாகியுள்ளது.

இதனால், மெல்லிய காற்று விசையிலும் காற்றாடியை இலகுவாகச் சூழலச் செய்யமுடிவதோடு, மின்சாரத்தைப் பெறுவதற்குரிய ஜெனரேட்டர்களையும் இயங்கச் செய்யமுடியும். வீடுகள், கட்டடங்களைவிட உயரமாகக் காற்றாலைகளை அமைப்பதற்கு, உலோகச். சட்டங்கள் பயன்படுத்த வேண்டுமாகையால் ஆரம்பச்செலவு அதிகமாகவுள்ளது. ஆனால், நீண்டகாலத்துக்கு எந்தச் செலவுமின்றிப் பயனை நுகரக்கூடியதாக உள்ளது. கடலால் சூழப்பட்டு, சமவெளிகளைக்கொண்ட நாடுகளில், காற்றுச் சக்தியிணைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் அதிகமாகும்.

டென்மார்க், நெதர்லாந்து, ஜேர்மனி, சுவீடன், பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் சோமாலியா, இந்தியா, சீனா போன்ற மூன்றாம் உலகநாடுகளிலும், காற்றுச் சக்தி வளம் கணிசமான அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனைப் பரவலாகவும், மலிவாகவும் பயன்படுத்த வழிகாணும் ஆய்வுகளும் தொடர்கின்றன.

நாடொன்றின் காற்றுச் சக்தி வளப்பயன்பாட்டுத் திட்டத்துக்கு - உள்ளூர் காற்றின் தன்மை, வேகம், காற்று வீசும் திசை, உயரம் போன்றன துல்லியமாக அளவிடப்படுதல் வேண்டும். இவை காற்று பற்றிய தரவுகளாக அமையும். இந்தத் தரவுகளைக் கொண்டு காற்றுக் காலநிலைத் தேசப்படம் உருவாக்கப்படுதல் இன்றியமையாததாகும். எமது பிரதேசத்தில் அமைந்துள்ள வளிமண்டலவியல் நிலையங்கள் இந்தத் தரவுகளையும் முறையாகத் திரட்டிவருதல் வேண்டும்.



எமது பிரதேசத்தில் பெரும்பரப்பு சமதரையாக விளங்குகின்றது. கடற்கரையோரப் பகுதிகளிலேயே பெருமளவு குடித்தொகை செறிந்துள்ளதோடு, குறிப்பிடக்கூடிய நகரங்கள் பலவும் கடற்கரையோரமாகவே பரந்துள்ளதை அவதானிக்கலாம். இந்த அம்சங்கள் காற்றலைகளை அமைப்பதற்குச் சாதகமானவையாக உள. மேலும், வடகீழ் மாகாணங்களில் மே முதல் செப்ரெம்பர்வரை தென்மேற்கு மொன்சூன் காற்று, வேகம் கொண்ட வறண்ட காற்றாக வீசுகின்றது. இது வடக்கே சோளகக்காற்று என்றும், கிழக்கே கச்சான் காற்று என்றும் வழக்கப்படுகிறது. டிசம்பர் முதல் பெப்ரவரிவரை இந்தப் பிரதேசங்களில் வடகீழ் மொன்சூன் காற்று வீசுகின்றது.

இவற்றுக்கு இடைப்பட்ட மாதங்களாகிய - ஒக்ரோபர், நவம்பர், மார்ச், ஏப்ரல் மாதங்களில் காற்று வீச்சுக் குறைவே. எனினும், இந்த மாதங்களில் சூறாவளிக் காற்றும், கடற்கரையோரப் பகுதிகளில் 'கொண்டல்' காற்றும் இடையிடையே வீசுகின்றன.

குளங்கள், கிணறுகளிலிருந்து விவசாய நிலங்களுக்கு நீரிறைப்பதற்கும், நகர கிராம மின்சார உற்பத்திக்கும் காற்றாலை அமைப்புகள் உதவிட முடியும். முயற்சியுள்ளோர் தனிப்பட்ட வீடுகளில்கூட சிறிய காற்றாலைகளை அமைத்து நீரிறைப்பதோடு, மட்டுப்படுத்தப்பட்டளவில் வீட்டு மின்சார தேவைகளையும் பூர்த்திசெய்யமுடியும்.

பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்,
புவியியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# தொழில் வங்கி




| நிறுவனம் | தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - கிளிநொச்சி | மத்திய மாகாண சபை | ஐ.நா.சபையின் குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்) மட்டக்களப்பு, கிளிநொச்சி, திருகோணமலை, கொழும்பு |
|---|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | மொழிபெயர்ப்பாளர் | மாகாண கமத்தொழில் பணிப்பாளர் | 1) கருத்திட்ட உதவியாளர் பதவி<br>2) உதவி கருத்திட்ட உத்தியோகத்தர்<br>3) எச்.ஐ.வி / எயிட்ஸ் உதவி நிர்வாக உத்தியோகத்தர்<br>4) உதவி மனிதவள அலுவலர் |
| அடிப்படைத் தகுதி | 1) 21 வயதுக்கு மேற்படல்<br>2) ஆங்கிலத்தில் பூரண அறிவு (எழுத, வாசிக்க, மொழி பெயர்க்கத் தெரிந்திருத்தல்)<br>3) கணினி அறிவு<br>4) க.பொ.த.உயர்தரம் அல்லது அதற்கு மேலான கல்வி அறிவு | கல்வித்தகைமை - முன் அனுபவங்கள் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பித்தல் | பதவி 1, 2<br>க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல், வர்த்தகம் திறமைச்சித்தி<br>பதவி 3, 4<br>முகாமைத்துவ / வணிக பட்டதாரிகள் |
| விண்ணப்ப முடிவு திகதி | 20.07.2003 | 30.07.2003 | 25.07.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# திராட்சைச் செய்கைக்கு ச[illegible]வாலான

**மீண்டும் யாழ்ப்பாணத்தில் திராட்சைச் செய்கையில் ஈடுபடுவோர் தொகை அதி[illegible]து வருகின்றது. புதிதாக திராட்சைச் செய்கையில் ஈடுபவதற்கான நாட்டம் அதிகரித்துள்ளது. திராட்சைச் [illegible]கயில் ஏற்படும் செலவின் பெரும் பகுதி, பீடை முகாமைத்துவத்துக்கே ஏற்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் திரா[illegible]யில் சேதம் விளைவிக்கும் பிரதான பீடைகள் பற்றிய இந்தக் கட்டுரையை, வேளாண் பெருமக்கள் வாசி[illegible]றுவிடாது, நடைமுறையில் கடைப்பிடித்துப் பயனடைய வேண்டும்.**

யாழ்ப்பாணத்துக்குப் பணத்தினை ஈட்டித்தரும் பழப் பயிர்களில் திராட்சையும் பிரதானமாகும். யாழ்ப்பாணத்தின்- உரும்பிராய், இளவாலை, திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களில் பெருமளவான திராட்சைத் தோட்டங்கள் காணப் படுகின்றன. 1980 களின் முற்பகுதியில் கிட்டத்தட்ட 280 ஹெக்ரயர் நிலப்பரப்பில் காணப்பட்ட திராட்சைத் தோட்டங்கள், 1990 களின் பிற்பகுதியில் 15 ஹெக்ரயருக்குக் குறைவான நிலப்பரப்பாகக் குறைந்தது. திராட்சை பயிரிடப்பட்ட நிலப்பரப்புக் குறைவடைந்ததற்கு, யாழ். குடாநாட்டில் நடைபெற்ற யுத்தமும், பீடைகளினால் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதமும், இவற்றைக் கட்டுப்படுத்த ஏற்பட்ட செலவு அதிகரிப்பும் பிரதான காரணங்களாகும்.





திராட்சையில் சேதம் விளைவிக்கும் பீடைகளை நோக்கினால்- யாழ்ப்பாணத்தில் திரிப்ஸ் என்னும் பனிப்பூச்சியும், பிலிபிற்றில் என்னும் இலையுண்ணும் வண்டும் பிரதான பூச்சி பீடைகளாகவும், இலைக்கீழ் பூஞ்சணம், துகள் (பவுடர்) பூஞ்சணம் ஆகியன பிரதான நோய்களாகவும் காணப்படுகின்றன. இவற்றைப் பற்றி ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

### 01) திரிப்ஸ் (பனிப்பூச்சி)

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அதிகம் சேதத்தை விளைவிக்கும் பூச்சி இதுவாகும். யாழ்ப்பாண விவசாயிகள் இதனைக் கராவல் பூச்சி என அழைப்பர். மிகவும் நுண்ணிய பருமனுடையது. இதனுடைய இளம் பருவங்களும் (குஞ்சு), நிறைவுடலிப் பருவங்களும் திராட்சையின் இலை, பூ, கனிகள் ஆகியவற்றின் மேற்பரப்பைத் துருவி (வறுகி) அதில் இருந்துவரும் சாற்றை உறுஞ்சுகின்றன. கனிகளில் இதன் தாக்கம் இளம்பருவத்திலேயே (மல்லிப்பருவம்), அதிகளவு சேதத்தை விளைவிக்கும். "திரிப்ஸ்" இன் தாக்கத்தினால் இலை வாடிவதங்கிக் கபிலநிறமடைந்து, கருகி மேல் நோக்கிச் சுருண்டு இறந்துவிடும்.

தாக்கப்பட்ட பூக்களிலிருந்து கனி உருவாகாது. கனிகளின் தோல் இதன் தாக்கத்தினால் தடித்த கபில நிறப்பட்டைப் போன்று மாறிவிடும். இதனால், கனிகள் பருமனில் பெருப்பது தடைப்பட்டு, சிறிய கனிகளாகக் காணப் படும். சிலவேளைகளில் இவற்றில் வெடிப்பு ஏற்பட்டு, அழுகல் நோயைத் தோற்றுவிக்கும். இதனால், பழத்தின் சந்தைப் பெறுமதி குறைந்துவிடும். பழத்தில் ஏற்படும் இந்தத் தாக்கத்தினை யாழ்ப்பாண விவசாயிகள் கராவல் என அழைப்பார்கள்.

இந்தத் திரிப்ஸ் பூச்சியானது மிகவும் நுண்ணியது. நுணுக்குக்காட்டியின் உதவியுடன் இதன் முழுத்தோற்றத்தையும் அவதானிக்கலாம். இவற்றின் முதிர் பூச்சிகள் கருமை நிறமுடையதாகவும், இறக்கைகளின் விளிம்புகளில் மென்தும்பு போன்ற அமைப்புடையதாகவும் காணப்படும். இளம் பருவப் பூச்சி மஞ்சள் கலந்த மண்ணிறமுடையது. இவை 9 - 12 நாட்கள் உணவை உட்கொண்டு, பின் உறங்கு நிலைக்கு மாறும்.

2 - 5 நாட்களின் [illegible], உ[illegible]ம் நிலைப் பருவத்திலிருந்து முதிர்பூச்சிகள் தோன்றும். மு[illegible]களை முதிர்பெண் பூச்சிகள்- இலைகளிலும், பூக்களிலு[illegible]ிக்காம்புகளிலும் தனித்தனியாக இடும்.


"திரிப்ஸ்" இன் தாக்க[illegible] கட்டுப்படுத்துவது என்பது, யாழ்ப்பாண விவசாயிகளுக்கு[illegible] பெரும் சவாலாக இருக்கின்றது. பல்வேறு முறைகளை ஒருங்கிணைத்துப் பாவிப்பதன்மூலம், இவற்றை வினைத்திறனாகக் கட்[illegible]ப்படுத்தலாம்.

பெரும்பாலும் வெப்பமான காலங்களிலே இதன் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதால், [illegible]ரை விசிறுவதன்மூலமும், பூச்சிகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.

இருவித்திலைத் தாவர களைகளில இவை தங்கி வாழக்கூடிய[illegible]ல், கொடி வெட்டும் காலங்[illegible]ில் பூரண களை அகற்றுதல் அவசியமாகும்.

தற்பொழுது Dimethoate [illegible]லப்சிட் Admire, Regent ஆகிய பூச்சிநாசினிகளைத் திரிப்ஸைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் ஒன்றைச் சிபார்சு செய்யப்பட்ட அளவுகளில் பயன்படுத்தலாம்.

பூச்சிகளிலிருந்து இளம் கனிகள் தோன்றும் காலங்களில் மட்டும் பூச்சிநாசினி விசிறல் போதுமானது. ஏனென்றால், முதிர்ச்சியடைந்த பழங்களில் இவை சேதம் விளைவிப்பதில்லை.



தாவரத்தின் அங்குரப் பகுதியும், வேர்ப்பகுதியும் தாக்கத்துக்குட்படுவதால், திராட்சைக் கொடியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு கொடிகள் குட்டையாகவும், விளைச்சல் குறைவும் ஏற்படுகின்றது.

நிறைவுடலி வண்டுகள் மினுமினுப்பான மண்ணிறமானவை. இவற்றின் மேல் செட்டையில் 3 கருமை நிறப் புள்ளிகளை அவதானிக்கலாம். பருமனில் சிறிய (3 - 5mm). இந்த வண்டுகள் ஏறத்தாள 1 வருடத்துக்கு உயிர்வாழக் கூடியது. இந்தக் காலப்பகுதியில் 350 தொடக்கம் 450 வரையான முட்டைகளை ஒரு வண்டு இடக்கூடியது. முட்டைகளைக் கொடியின் தண்டுப்பகுதியில் பிளவடைந்த பட்டைகளிலும், நிலத்தில் காணப்படும் குப்பைகூழங்களிலும் இடும். முட்டையிலிருந்து 5 நாட்களில் குடம்பிப்புழுக்கள் வெளிவரும். இவை மண்ணைத் துளைத்து, வேரின் மேற்பரப்பைச் சென்றடைந்து தாக்கத்தை விளைவிக்கும். குடம்பிப்பருவம் 36 நாட்கள்வரை நீடித்துக் கூட்டுப்புழுவாக மாறும். இது சேதத்தை விளைவிக்காத பூச்சியின் பருவம், இது மண்ணில் காணப்படும். கூட்டுப்புழு பருவத்திலிருந்து 10 - 11 நாட்களில் வெளிவரும். முதிர் வண்டுகள் இனக் கலப்பின் பின் முட்டையிட ஆரம்பிக்கும். இந்த வண்டானது 55 தொடக்கம் 60 நாட்களில் வாழ்க்கை வட்டத்தினைப் பூர்த்தி செய்வதனால், ஒரு வருடத்தில் 5 - 6 சந்ததிகளைத் தோற்றுவிக்கக்கூடியது.

## பிரதா[illegible] பீடைகளும் தீர்வுகளும்

### 02) திராட்சை இலையுண்ணும் வண்டு

பீலீ வண்டு எனப்படுவது சிறிய மினுமினுப்பான மண்ணிற நிறமுடைய திராட்சை இலையுண்ணும் வண்டாகும் (கொலியெப்டெரா வருணம்). வண்டின[illegible] குடம்பிப் பருவமும், நிறையுடலிப் பருவமும் திராட்சைக்குச் சேதத்தை விளைவிக்கக்கூடியன.

நிறையுடலி வண்டுகள் முதிர்ச்சியடையாத இளம் இலைகளையும், குருத்துகளையும் வெட்டி உண்பதன்மூலம் இலையில் துளைகளை ஏற்படுத்து[illegible] தாக்கம் அதிகரிக்கும்போ[illegible] இலை கருகிவிடுகின்றது. இ[illegible]றுடன் வண்டுகள்- பூக்களையும், அரும்புகளையும், பிஞ்சுக் க[illegible]களையும் சேதமாக்குகின்ற[illegible] இதனால் மொட்டுகளும், இள[illegible]னிகளும் உலர்ந்து உதிர்கின்றன.

இவற்றின் குடம்பிப் புழுப் பருவம் மண்ணில் வாழ்கின்றது. இவை வேரின் மேற்பட்டையை உண்பதன்மூலம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வேரின் மேற்பட்டை சேதத்திற்குள்ளாவதால் நீர், கனியுப்பு அகத்துறிஞ்சல் பாதிக்கப்படுகின்றது. சிலவேளை களில் மண்வாழ் நோய்க்கிருமிகளின் தாக்கத்துக்குட்பட்டு, வே[illegible] அழுகல் ஏற்படுகின்றது.



இவற்றின் இரு பருவங்கள் சேதத்தை விளைவிப்பதனால், கட்டுப்படுத்துவது சற்றுக் கடினமானது.

நிறையுடலி வண்டுகளைக் கட்டுப்படுத்துவது ஓரளவு சுலபமானது. இவற்றினை நாம் தொட்டதும் உடனடியாக இறந்ததுபோல் (பொய்க்கோலம்) கீழே விழுந்துவிடும். இந்த இயல்பினைப் பயன்படுத்தி, கூம்பு போன்ற (புனல்) ஒரு அமைப்பை உருவாக்கி, அதன் அடிப்பகுதியில் ஒரு போத்தலில் சிறிதளவு மண்ணெண்ணெய் வைத்து, கொடியின் கீழ் தட்டிக்கொண்டு போவதன்மூலம், சூழலுக்குப் பாதகமில்லாத முறையில் வண்டுகளைக் கட்டுப்படுத்தலாம்.

- ❖ தாவரப் பூச்சிகொல்லிகளான- வேப்பம் விதைச்சாறு, உள்ளிச்சாறு என்பவற்றை உரியளவில் கொடிகளுக்கு விசிறுவதன்மூலம், வண்டினால் ஏற்படும் சேதத்தைக் குறைக்கலாம்.
- ❖ Dimethoate பூச்சிநாசினியைச் சிபார்சு செய்யப்பட்ட அளவில் பயன்படுத்தலாம்.

மண்ணிலுள்ள குடம்பிப் புழுக்களையும், கூட்டுப்புழுப் பருவங்களையும் அழிப்பதற்கு Carbofuran குறுணலைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்தலாம். கொடி கொய்த காலத்தில் மட்டுமே பியுறுடான் குறுணலைப் பாவித்தல் வேண்டும்.

(தொடரும்)

**தகவல் தொடர்பு மையம்**
**(மாணவர் பகுதி)**
**விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.**

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சங்கானை | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 40/= | - | 40/= | 50/= | 60/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 70/= | 70/= | 70/= | 65/= | 65/= | 70/= |
| கத்தரிக்காய் | 20/= | 50/= | 20/= | 45/= | 40/= | 45/= | 40/= |
| பாகற்காய் | 50/= | 40/= | 40/= | 45/= | 50/= | 50/= | 40/= |
| வெண்டிக்காய் | 25/= | - | 30/= | 40/= | - | - | 20/= |
| கரட் | 50/= | 40/= | 80/= | 70/= | 60/= | 60/= | 80/= |
| பீற்றூட் | 30/= | 20/= | 40/= | 40/= | 40/= | 50/= | 30/= |
| முருங்கைக்காய் | 150/= | - | 100/= | 80/= | 160/= | 100/= | 90/= |
| வெங்காயம் | 35/= | 25/= | 30/= | 30/= | 30/= | 25/= | 20/= |
| பச்சை மிளகாய் | 45/= | 35/= | 35/= | 60/= | 60/= | 40/= | 40/= |

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு. - திருக்குறள்.

# நமது நோக்கு

## எதற்காக இந்த எதிர்ப்பு?

இதுவரை காலமும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மீதும், கொழும்புக்கான நோர்வே தூதுவர் வெஸ்பேர்க் மீதும் கவனம் குவித்து வைத்திருந்த பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் முழு இலக்கும், தற்போது - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மீது திரும்பியிருக்கிறது.

கடந்த சில வாரங்களில் மட்டும் கொழும்பிலும், திருகோணமலையிலுமாக - கண்காணிப்புக்குழுவிற்கு எதிராகத் திரண்டு ஆர்ப்பாட்டங்கள் செய்த சிங்கள அமைப்புக்கள் - கண்காணிப்புக் குழு நாட்டைவிட்டே வெளியேற வேண்டும் என எச்சரிக்கை செய்துள்ளன.

கொழும்பில் - பௌத்த பிக்குகள் பெருமெடுப்பில் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டப் பேரணியொன்றில், கண்காணிப்புக்குழுத் தலைமையகத்துக்கு இது தொடர்பான கண்டன மகஜரொன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினையைப் பொறுத்தளவில் - நீதியாகவும், நேர்மையாகவும் எவரும் நடந்துகொள்ள முயன்றாலும் - சிங்கள இனவாதிகளுக்கு அது உவப்பான காரியமாகத் தோன்றுவதில்லை என்பது வரலாறாயிருக்க,

கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகளும், இனவாதிகளுக்குப் பொறுக்கக்கூடியதொன்றாக இல்லாமற்போனது வியப்பில்லாத ஒன்றேயாகும்.

ஆனாலும் - கொழும்பை மட்டுமே மையங்கொண்டிருந்த, கண்காணிப்புக்குழுவுக்கு எதிரான சிங்கள அமைப்புக்களின் வெளிப்படையான எதிரலைகள் - தற்போது, திருமலை போன்ற பகுதிகளுக்கும் பரவியிருப்பது அவதானத்திற் கொள்ளவேண்டிய விடயமாகின்றது.

அதேவேளை - போர்நிறுத்தமும், அதனைச் செம்மையாக்குவதற்கான கண்காணிப்பும் - போர் ஓய்வைக் கடைப்பிடித்து வரும் இரண்டு தரப்புகளுள்ளும், விடுதலைப் புலிகளையே நியாயமின்றிப் பாதித்து வருகின்றமை வெளிப்படையானது.

போர்நிறுத்தம் அமுலானதன் பின்னரும், போராளிகள் பலரை - படையினரின் அடாவடித்தனமான மீறல்களில் விடுதலைப் புலிகள் இழந்திருப்பதுடன், தரையிலும், கடலிலும் பல தடவைகள் மிகத்தீவிரமான முறையில் அவர்கள் ஆத்திரமூட்டப்பட்டதை/வருவதை எவரும் மறந்துவிட முடியாது.

பெண் போராளிகள் மீதான இடுப்புப்பட்டி விவகாரம், சோதனைச் சாவடிகளில் போராளிகள் மீதான திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் அடாவடிகள், அரசியற்துறை அலுவலகங்கள் சுற்றிவளைப்பு, போராளிகள் கைதும், தடுத்துவைப்பும் முதலாக - கடலில் போராளிகள் நடமாட்டம் தடுக்கப்படுவதுடன், அவர்களின் வர்த்தகக் கப்பல்களும் அழிக்கப்பட்டு, போராளிகள் பலரும் உயிர்துறக்கக் காரணமாக இருந்ததுவரை, அப்பட்டமான போர்நிறுத்த மீறல்களுக்குப் படையினரே காலாகி இருந்துவரும் நிலையில், கண்காணிப்புக்குழுவின் மீது அதிகம் நோவதற்குப் பாத்தியதைப்பட்டவர்கள் தமிழர் தரப்பாகவே இருந்துவர,

கண்காணிப்புக்குழுவின் மீது, சிங்கள அமைப்புக்கள் கோபம் கொள்வதற்கான தார்மீகக் காரணங்கள் எவையென்பதுதான் கேள்விக்குறிகளாக இருக்கின்றன.

போராளிகள், போர்நிறுத்த காலத்தில் பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க - படைத்தரப்பு, இக்காலத்தை வாய்ப்பாகக் கொண்டு - புதிய படைமுகாம்களையும் சோதனைச்சாவடிகளையும் அமைக்கவும் தனது வழமையான படைப்பலப் பெருக்க நடவடிக்கைகளோடு - வெளிநாடுகளிலிருந்து விசேட இராணுவ, ஆயுததளபாட உதவிகளையும் பெற்றுவருகின்றது.

அதேவேளை - போர் ஓய்ந்த பின்னரே, சிங்களப் பகுதிகளிலுள்ள சோதனை நிலையங்களும், வீதித் தடைகளும் அகற்றப்பட்டதுடன்,

வடக்கேயும், தமிழர் பகுதிகளுள்ளும் சிங்கள மக்கள் சுதந்திரமாக வந்துசெல்லவும் வாய்ப்பு ஏற்பட்டது.

கொழும்புவரை ஆழமாகப் பரவியிருந்த போரின் அதிர்வலைகள் தணிந்து - தாம் இப்போதே நிம்மதிப் பெருமூச்சு விடுவதாக, சிங்கள மக்களில் பெரும்பாலானோர் மனந்திறந்து கூறவும் காலம் வந்தது.

ஆனால் - மறுபுறமாக, தமிழ்மக்கள் இன்னமும் இடம்பெயர்ந்தவர்களாகவும் அகதிகளாகவும் வாழும் சூழல் மாறாததோடு, பாதுகாப்பு வலயங்களால் மீள்குடியமர்வு தடுக்கப்பட்டவர்களாக, வேதனையிலும் கண்ணீரிலும் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

போதாததற்கு - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், இப்போது எழுந்தமானமாக வீதிச் சோதனைகளும், சுற்றிவளைப்புக்களும் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன.

நிலைமைகள் இவ்வாறிருக்க - போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுவினரை வெளியேற்ற வேண்டுமென சிங்கள அமைப்புக்கள் கோருவதற்கான பின்புலம் - வியப்புக்குரியதாகவே அமைகின்றது.

கண்காணிப்புக் குழுவினரை வெளியேறுமாறு கோருவதன்மூலம் - தேவையற்ற பதற்றத்தையும், அநாவசியமான பிரச்சினைகளையும் உருவாக்குவதோடு, போர்நிறுத்தம் பற்றிய உண்மைக்கு மாறான கருத்துருவாக்கங்களை சிங்கள மக்களிடம் பரப்புவதற்குமே - இனவாதிகளின் இத்தகைய முயற்சிகள் உதவக்கூடும்.

# புலிகளுக்கு முழு ஆதரவு வழங்குவதன்மூலம் தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறமுடியும்!

## சீலன் நினைவுநாள் கூட்டத்தில் இரா. சம்பந்தன்

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் - நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முழுமையான ஆதரவினை வழங்குவதன்மூலமே எமக்கான சகல உரிமைகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். சமாதானத்தைச் சீர்குலைக்க முனையும் சக்திகள் திருமலை நகரிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், அனைத்துத் தமிழ்மக்களும் ஒன்றாக இணைந்து செயற்படவேண்டுமென, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கேட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் - சீலன் நினைவாக இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தென்னவன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தேசியக் கொடியையேற்றிவைத்தார். சீலனின் சகோதரர் லெப்.சீலனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தொடர்ந்து பேசுகையில் -

தமிழ்மக்களுக்கான உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான சுயாட்சியினையே, இன்று தமிழினம் வேண்டி நிற்கின்றது. இதைக்கொண்டு செல்லும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பினை, நாம் ஒரு வாகனமாகவே எண்ணிச் செயற்படுகின்றோம். இந்த இடைக்கால நிர்வாகம் என்ற வாகனத்தில் சவாரிசெய்து நமது குறிக்கோளை அடையமுடியும்.

இனியும் நாம் போராடிக் கொண்டிருக்கமுடியாது. நமது போராளிகள் யுத்தத்தின்மூலம் அழியக்கூடாது. விடுதலைப் புலிகளுடன் யுத்தம் செய்து, வெற்றிபெறமுடியாது என்பதனை சர்வதேசமும் உணர்ந்து கொண்டமையால்தான் பேச்சுவார்த்தையின்மூலம் நீதியானதும், நிரந்தரமானதுமான தீர்வு ஒன்றினைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

நமது இறுதி இலக்கினை அடைவதற்காகவே நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இதனை அறியாதவர்கள், புரியாதவர்கள் எ[illegible]னையுமே புரியமாட்டார்கள். தம்பி சீலனின் தியாகம் அ[illegible]பரியது. 1978 ஆம் ஆண்டிலேயே, தனது மாணவப் பருவத்தில் அவர் தனது தியாக உணர்வுகளை வெளிப்படுத்தினார்.

இந்த மாவட்டத்தின் முதல் மாவீரராக அவர் திகழ்கின்றார். தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அவர்மீது ஆழ்ந்த பற்றுக்கொண்டிருந்தார்.

இத்தகைய மாவீரர்களின் தியாகத்தினாலேயே இன்று தமிழினம் தலைநிமிர்ந்த இனமாகவுள்ளது. இத்தகைய வரலாறுகள் நமக்குப் பல உண்மைகளை உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக, சமாதான நடவடிக்கைகளைச் சீர்குலைக்க பல முனைகளிலிருந்தும், தீயசக்திகள் முனைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளை, விடுதலைப் புலிகளே தமிழினத்தின் ஏகசக்தி என்ற வகையில் செயற்பட்டு, நமது இலக்கினை அடைய முயல்வோம் என்றார்.

# புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் மட்டக்களப்பில் சந்தித்துப் பேச்சு!


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான காணிப்பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் உபகுழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம், வவுணதீவில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் வவுணதீவு



வவுணதீவு சந்திப்பில் கைகுலுக்கும் புலிகள் - முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளைப் படத்தில் காணலாம்.



இரு தரப்பினரும் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்

பிரதேச செயலக கட்டடத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் தரப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் நிஷாந்தன், நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் றெஜினோல்ட் ஆகியோரும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம்களின் சார்பில் வீடமைப்பு பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ் - முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பெற்றோலிய எண்ணெய் ஆய்வுக்கு முதலீட்டாளர்கள் வருகின்றனர்!

(கொழும்பு)

அடுத்தவருடம் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் எண்ணெய்வள ஆய்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று, மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையில் எண்ணெய்வள ஆய்வுப்பணிகளை மேற்கொள்வதற்கு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் கொழும்புக்கு வரவுள்ளனர்.

நாட்டின் அறுபது சதவீதமான மின்சாரத் தேவை, பெற்றோலியத்தின்மூலமே நிறைவேற்றப்படுகின்றது. இதனால், இங்கு பெற்றோலிய ஆய்வைத துரிதப்படுத்த வேணடிய கட்டாயம் எழுந்திருக்கின்றது.

மிகவிரைவில் நாட்டிலுள்ள எண்பத்தைந்து சதவீதமான மக்களுக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாகவும், அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தார்.

# டக்ளஸ் தேவானந்தாவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

களுத்துறைச் சிறைச்சாலையில் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கில், அவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு மீண்டும் அழைப்பாணை அனுப்பும்படி, களுத்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணை களுத்துறை நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மன்றில் ஆஜராகியிருககவில்லை. இவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டபோதும், அவர் சமுகமளிக்கவில்லையென சந்தேகநபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்ட நீதிவான், வழக்கு விசாரணையினை ஒத்திவைத்தார்.

# லண்டனில் வசிக்கும் ஈழத்தமிழர்களுக்கும் ஆபிரிக்கக் கறுப்பருக்கும் இடையில் மோதல்!

## சிலர் காயம், பலர் கைதாகி விடுவிக்கப்பட்டனர்

(லண்டண்)

லண்டனில் வசிக்கும் இலங்கையர் உள்ளிட்ட ஆசிய நாட்டவர்களுக்கும், ஆபிரிக்கக் கறுப்பினத்தவர்களுக்கும் இடையில், கடந்த சனிக்கிழமை பெரியளவிலான கலவரம் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

லண்டனிலுள்ள இலங்கைத் தமிழர்கள் - மைதானம் ஒன்றில் விளையாடிக்கொண்டிருந்தபோது, ஆபிரிக்கக் கறுப்பினத்தவர்கள், அந்தப் பகுதிக்கு வந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் ஆரம்பமான இந்த வாக்குவாதம், பின்னர் மோதலாக உருவெடுத்துக் கலவரமாக மாறியது. இலங்கைத் தமிழர்கள், இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள் ஒரு பக்கமாகவும், ஆபிரிக்க கறுப்பினத்தவர்கள் இன்னொரு பக்கமாகவும் நின்று சண்டையிட்டதால், அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

இதையடுத்து நூற்றுக்கணக்கான ல்ண்டன் பொலிஸார் அந்தப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு, கலவரம் அடக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அத்துடன், இவர்களுக்கு உதவியாக, இரண்டு ஹெலிகொப்ரர்களும் வானத்தில் வட்டமிட்டு நிலைமையை அவதானித்துக் கொண்டிருந்தன.

இரவு 10.30 மணிவரை நீடித்த மோதல்களையடுத்து, பொலிஸார் அந்தப் பகுதியில் நிலைமையைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸார் தாக்கியதாலும், மோதல்களிலும் சில இலங்கைத் தமிழர்கள் காயமடைந்ததாகவும் தெரியவருகின்றது. மேலும், பலரைப் பொலிஸார் கைதுசெய்து விசாரணைசெய்த பின்னர் விடுவித்தனர்.

இந்த மோதல்களை அடுத்து - லண்டனில் வசிக்கும் ஆசிய நாட்டவர்களுக்கும், ஆபிரிக்கக் கறுப்பினத்தவர்களுக்கும் இடையில் பதற்றமான சூழல் நிலவிவருகின்றது.

# இலட்சியப் பயணத்தை முன்னெடுக்க உந்துசக்தியாகத் தமிழ் ஊடகங்கள்!

**விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர்கள் - கடந்த சனிக்கிழமை மாலை, கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது, சு.ப.தமிழ்ச்செல்வன் பகிர்ந்துகொண்ட கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.**

**(தொகுப்பு- இரா.துரைரத்தினம்)**

*நேற்றைய தொடர்ச்சி...*

எங்கள் நியாயங்கள், நிலைப்பாடுகளைச் சொல்லக்கூடிய கேள்விக்கணைகள் அங்கு அரிதாகவே இருக்கும்.

பெரும்பான்மை இனத்தை திருப்திப் படுத்தக்கூடிய கேள்விகள்தான் அங்கு எழுப் பப்படுகிறதே ஒழிய, தமிழ்மக்களுக்கு நம் பிக்கை ஊட்டக்கூடிய உண்மையைச் சொல லக்கூடிய கேள்விகள் எழாததால், அது தொடர் பான கருத்துக்களை வெளிப்படுத்துவது, எங் களுக்கும் சங்கடம்தான்.

வலிமையடைந்த நாடுகளில் - ஊடகங் களின் வளர்ச்சி உச்சமாக இருக்கிறது. சர்வ தேச அபிப்பிராயங்களைத் திருப்புவதற்கும், இராணுவ பிரயோகத்தைவிட, ஊடகபிரயோ கத்தைத்தான் முதலில் பயன்படுத்துகின்றனர். தமிழ்த் தேசத்தின் வளர்ச்சிக்கு ஊடகத் துறையின் பங்கு முக்கியமானது.

எங்கள் மக்களின் கருத்து நிலைப்பாட்டை ஒன்றாக்குவதற்கும், சர்வதேச சமூகத்துக்கு எங்கள் நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாக வும், புரிந்துகொள்ளக்கூடிய வகையில் - முன் னெடுத்துச் செல்வதற்கும் ஊடகத்துறையின் வளர்ச்சி முக்கியமானதாகும்.


காலங்காலமாகத் தமிழினம் எவ்வாறு ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுப் பலவீனப் படுத்தப்படுகின்ற ஒரு தொடர்தான், ஊடகவி யலாளர்களுடைய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது. நாங்கள் இதை மீறிச்செல் லத்தான் வேண்டும்.

எங்கள் அமைப்பும், தலைமையும் இதில் மிகுந்த கரிசனைகொள்ளும். ஆதரவையும் தமிழ் ஊடகவியலாளர்களுக்குத் தரும். 50 வருடகால வரலாற்றில் - சர்வதேச சமூகத் தின் ஈடுபாட்டுடன் பேச்சுவார்த்தை இப்போது தான் ஏற்பட்டிருக்கிறது. சர்வதேச சமூ கத்துக்கு, எமது போராட்டத்தின் நியாயத் தன்மையைத் தெளிவுபடுத்திக்கொண்டிருக் கிறோம். பேச்சுவார்த்தையில்கூட ஊட கவியலாளர்களின் சந்திப்பும் முக்கியமான தொன்று. சர்வதேச சமூகத்துக்குச் செய்திகளை அதன்மூலம்தான் கொண்டு செல்லமுடியும்.

சர்வதேச இராஜதந்திரிகளிடமும் அவர் கள் ஏற்றுக்கொள்கிறார்களோ, இல்லையோ எங்கள் போராட்டத்தின் நியாயத்தன்மையை விளக்கிவருகிறோம், அவர்களும் புரிந்து கொள்கிறார்கள்.

சிங்கள மக்கள் மத்தியில் ஒருமாற்றம் வந்திருக்கிறது என, நினைக்கிறேன். புலியை- சிங்கள சமூகம் மனிதனாகப் பார்த்தது அண் மைக்காலத்தில்தான். அப்படித்தான் உருவகப் படுத்தியிருந்தார்கள்.

தென்னிலங்கையில் வெள்ளப்பெருக்கு ஏற் பட்டபோது - நிவாரணங்களை எங்கள்



போராளிகள் அங்கு கொண்டு சென்றபோது, ஜே.வி.பி. பல இடங்களில் மக்களை மறித்தி ருக்கிறது. ஜே.வி.பியை எல்லாம் தள்ளி விட்டுவிட்டு, நிறையப் பொதுமக்கள் வந் தார்கள். எல்லா மக்களும் முண்டியடித்துக் கொண்டு வந்தது, புலி எப்படி இருக்கும் எனப் பார்ப்பதற்காகத்தான். கடந்தகாலங் களில் புலி இப்படித்தான் இருக்கும் என உருவகப்படுத்தி, சர்வதேச அளவில் பிரசாரம் செய்திருந்தார்கள். அப்படி இருந்ததை இப் போது மாற்றியமைத்திருக்கிறோம்.

சர்வதேச அளவில், இலங்கை அரசாங்கத் தைப்பொறுத்தவரை, யுத்தத்துக்கு முகம் கொடுக்கும் சக்தி அவர்களுக்கு இல்லை. உண்மையில், சர்வதேச் நாடுகளின் உதவி யுடன்தான், இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் தமிழர்களின் போராட்டங்களை, எழுச்சியை அடக்கி ஒடுக்குவதற்கு முனைந் தார்கள். சிங்கள இனவாதசக்திகள் - தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டு வருவதற்கு இடமளிப்பார்களா என்பது கேள் விக்குறியான விடயந்தான்.

நாங்கள், சிங்கள மக்களுக்கு எதிரான வர்களல்லர். வடக்கு - கிழக்கில் தீர்வு ஏற் படுகின்றபோது, அது - தென்னிலங்கையிலும் பாரிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும்.

வெளிநிலையில் நின்று, சர்வதேச சமூகத் துக்குக் கருத்துருவாக்கத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையிருக்கிறது. தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளை, ஏற்றுக்கொண்ட வர்கள் என நம்பப்படுகின்றவர்களின் வெளிப் பாடுகள்கூட வித்தியாசமாக இருக்கிறது.

இந்தியாவைக் கொண்டுவருவோம், அமெரிக் காவைக் கொண்டுவருவோம் எனக் கூறிவரு கிறார்கள். சிங்கள தேசத்தைத் திருப்திப் படுத்தவேண்டும் என்பதில்தான் இவர்கள் அக்கறையோடு இருக்கிறார்கள். பிரச்சி னையோடு இருபபவர்கள் நாங்கள். தமிழ்மக் களும், தமிழ்த் தேசமும்தான் பாதிக்கப்பட்ட வர்கள்.

எனவே, திருப்திப்படுத்த வேண்டியது தமிழ் மக்களையே ஒழிய, சிங்கள மக்களையல்ல. இந்தநிலை இங்கு மாறும்வரை தீர்வு வரப் போவதில்லை. பாதிக்கப்பட்டவர்களைத் திருப் திப்படுத்த - துணிச்சலும், அர்ப்பணிப்பும் தேவை. தமிழ்மக்களுக்கு விழிப்பைத்தான் கொடுக்கவேண்டும்.

நாளாந்தம் எங்கள் போராளிகளை, சகோ தரர்களை இழக்கும்போது, எங்கள் துடிப் புக்களும், பாதிப்புக்களும் விபரிக்க முடியா தது. எங்களுடைய ஒட்டுமொத்த மக்களின் உரிமைகளை, எதிர்காலத்தை விட்டுக்கொடுக்க முடியாது.

சமாதானம் என்று கூறிக்கொண்டு எங்கள் போராட்டத்தைப் பலவீனப்படுத்திக்கொண்டு, சிங்களதேசம் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு, மீண்டும் அழிவுப்பாதைக்குப் போகு மாக இருந்தால், அதை நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது என்பதில் தெளிவாக இருக்கிறோம்.

மீண்டும் சண்டை தொடங்கினால் - அமெரிக்கா வருமா, இந்தியா வருமா என்ற கேள்வி எழுந்திருப்பது உண்மைதான்.

எல்லோருக்குமே இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதால், பிராந்திய நலன்களுக்காக, இந்த நாட்டைப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள்.

அவர்களுக்குப் பல நலன்கள் இருக் கின்றன. வர்த்தக நலன், பாதுகாப்பு நலன் எனப் பல உண்டு. ஆனால், விடுதலைப் புலிகளைத் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, சமாதானப் பேச்சுவார்த் தைகளைத் தொடரவேண்டும் என்ற அழுத்தம் யார் கொடுத்தது, சர்வதேச சமூகம்தான்.

எங்கள் இனத்தின் விடுதலைக்காக இவ்வ ளவு உயிர்த்தியாகங்களைச் செய்துகொண்டி ருக்கும்போது - துரோகத்தனங்களைச் செய்து, காட்டிக்கொடுக்க முற்பட்டால் பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது. களையைவிட்டால் பயிரே இருக்காது.

சிலர் சுயநலத்துக்காக ஒட்டிக்கொண்டு பிழைப்பை நடத்துகின்றனர். அரசாங்கத்துக்கு எங்களைச் சமாளித்துப் போகவேண்டிய தேவையிருக்கிறது. ஐக்கிய தேசிய முன் னணி சமாதானத்தை உறுதிப்படுத்தி, பொரு ளாதாரத்தைக் கட்டியெழுப்பி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவில்லை என் றால், அரசியல் எதிர்காலம் இல்லை.

ஊடக ஆதிக்கம் அவர்களின் கைகளில் இருக்கும்வரை, நீங்கள் எப்படிப் பொருமிக் கொண்டிருந்தாலும், உங்களால் சிலவேளை இயலாமை என்பது இருந்துகொண்டே இருக் கும். நீங்களும் போராளிகள்தான். நிமலராஜன் போன்ற பத்திரிகையாளர்களை நாங்கள் ஒருபோதும் மறக்கமுடியாது.

புலம்பெயர்ந்து வாழும் மக்களை பொறுத் தவரையில் - தலைவர் கூறுவது இதுதான். நாங்கள் புலம்பெயர்ந்துபோன மக்களை, ஒரு போதும் இழிவாகவும் பார்க்கவில்லை, குறை வாகவும் நினைக்கவில்லை. எங்களின் பெரிய சக்தியாகத்தான் பார்க்கிறோம். ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் இலங்கையையும், தமிழீ ழத்தையும் ஒப்பிட்டு ஒரு கட்டுரை வந்தது. பலஸ்தீனர் போய், இஸ்ரேல் எல்லையில் தூங்கிக்கொண்டிருந்தது போலத்தான், சிங்கள வர்களுக்கு ஏற்படப்போகிறது என்று எழுதியி ருந்தார்கள். தமிழர்கள் அவ்வளவுதூரம் தங் கள் பொருளாதாரத்தை வளர்த்து வைத்திருக் கிறார்கள் என்று, புள்ளிவிபரங்களுடன் எத் தனை குடும்பங்கள் வெளிநாடுகளில் இருக்கி றார்கள் எனவெல்லாம் தெரிவித்திருந்தார்கள். தமிழீழத்தின் பொருளாதாரம் எங்கு போகப்போ கிறது, வளர்ச்சி எங்குபோகப்போகிறது என்ற ளவில் செய்திவெளியிட்டிருந்தார்கள்.

இது புலம்பெயர்ந்த தமிழ்மக்களின் வளர்ச் சிகண்டு, சிங்கள தேசம் உண்மையில் அச்சம் கொள்கிறது. புலம்பெயர்ந்த மக்களிடம் நாங் கள் கேட்டுக்கொள்வது - பொறியியலாளர்கள், வைத்தியர்கள் என்று இல்லாமல், சகலதுறை களிலும் முன்னேறவேண்டும் எனக் கூறிவரு கிறோம். ☆

# சாவகச்சேரி வைத்தியசாலை புனரமைக்கப்படுமா?

கடந்தகாலங்களில் ஏற்பட்ட யுத்த நெருக்கடிகளால் யாழ்.குடா நாட்டின் பல பிரதேசங்களும் அழிவு களைச் சந்திக்கத் தவறவில்லை. அதிலும் தென்மராட்சியில் ஏற்பட்ட யுதத அனர்த்தங்களும், கட்டட அழி வுகளும் பலரது கவனத்தையும் ஈர்த தன. ஈழப்போராட்டத்தில் இதுவரை எந்தப் பிரதேசங்களிலும் ஏற்படாத மிகப் பெரிய அழிவுகளைத் தென்ம ராட்சி சந்தித்துள்ளது.

ஆனால், தற்போது யாழ். குடா நாட்டைச் சூழ்ந்திருந்த யுத்த மேகங் கள் கலைந்து, புரிந்துணர்வு ஒப்பந் தம் ஏற்படுத்தப்பட்டு, யுத்த நிறுத்த மும் ஏற்பட்டதையடுத்து - மக்கள் மீளவும் குடியேறி இயல்பு வாழ்க் கைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின் றனர். இந்தவேளையில் - தென்ம ராட்சியில் கட்டடங்களின் புனர்நிர் மாணப் பணிகளும் நடைபெற்றுவரு கின்றன.

இந்த நிலையில் மக்களின் அன் றாட வாழ்வியலோடு தொடர்புபட்ட "வைத்திய வசதிகள்" இதுவரை சீராக் கப்படாமல் - அமுக்கப்பட்ட நிலையி லேயே இருந்துவருகின்றது. இந்த நிலை தென்மராட்சி மக்கள் மத்தி யில் பெரும் விசனத்தை ஏற்படுத் தியுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கிவந்த ஒரேயொரு அரசினர் வைத்தியசாலையென்றால் அது, "சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலை" தான். ஆனால், அந்த வைத்தியசாலை இன்று வளங்களை யும், கட்டடப் பொழிவுகளையும் இழந்தநிலையில், ஒரு தற்காலிக அமைப்பின்கீழ் இயங்கி வருகின்றமை மிகவும் கவலைதரும் விடயம்தான்.

யுத்த அழிவுகளுக்கு முன்னர்- இந்த வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலைக்கு நிகரான சகல



**செய்திக் கட்டுரை**

வளங்களையும் கொண்டிருந்தமை குறிப்பிடக்கூடியது.

வெளிநோயாளர்கள் பிரிவு, ஆண் - பெண் சிகிச்சை வாட்டுகள், பிரசவ விடுதி, மருத்துவ ஆய்வுகூடம், வைத்திய தாதியர்களுக்கான விடுதி கள், பிரேத அறை, வாகனத்தரிப் பிடம், சிற்றுண்டிச்சாலை, களஞ்சிய அறை போன்ற அனைத்து வசதிக ளுடனும் மிகவும் திறம்பட இயங்கி வந் தது. தற்போது யுத்தத்தால் இவை அனைத்தும் அழிவடைந்த நிலையிலேயே காட்சிதருகின்றன.

தென்மராட்சி மக்களின் இடம் பெயர்வுக்கு முன்னர் - இரண்டு பதிவு வைத்தியர்கள், இரண்டு வைத்திய அதிகாரிகள், நூற்றுக்கும் மேற்பட்ட தாதியர்கள் உட்படப் போதிய ஆளணி வளங்களுடன், இந்த வைத் தியசாலை இயங்கிவந்தது. ஆனால், தற்போது வைத்தியசாலை வளவி லேயே ஒரு தற்காலிக அமைப்பின் கீழ் இயங்கிவரும் இந்த வைத்தி யசாலையில், மீள் நியமனம் செய் யப்பட்ட பதிவுவைத்தியர் ஒருவரும், உதவி வைத்தியர் ஒருவரும், 25 தாதியர்கள் உட்பட வைத்திய சாலை ஊழியர்களும் கடமையாற்றி வருகின்றனர்.

மின்சார வசதிகள் இன்றியும், தண்ணீர் வசதியில்லாத நிலையிலும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட - மெத்தைகள் இல்லாத கட்டில்களி லும், தரையிலுமாக நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்ற னர். இங்கு ஏ.ஆர்.வி. போன்ற முக்கிய மருந்துகளைப் பேணுவதற்குப் போதிய வசதிகளும் இல்லாமல் இருக்கின்றது.

இந்த வைத்தியசாலையில் தென் மராடசியின் பல பகுதிகளைச் சேர்ந்த மககள் மட்டுமன்றி- பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, கரைச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் சிகிச்சைபெற்று வந்துள்ளனர்.



அழிவடைந்து காட்சியளிக்கும் சாவகச்சேரி வைத்தியாசாலை

இந்தப் பிரசேதங்களில் பெரும்பா லான பகுதிகளில், முழுமையாக மக் கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலை யில் யுத்தகாலங்களில் புதைக்கப் பட்ட மிதிவெடிகளாலும், கைவிடப் பட்ட வெடிபொருட்களாலும் விபத்து மற்றும் இயற்கை நோய்த் தொற்றுக ளுக்கும் உட்பட்டவர்களில், கடந்த ஆறுமாத காலங்களில் மட்டும் ஐயா யிரம் பேர்வரை சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

அத்துடன், 2500 பேர்வரை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற் றும் சென்றுள்ளதாக வைத்தியசா லைப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. இவர்களைவிட 17 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் கிளினிக்குகளிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் வெளி நோயாளர் பிரிவில் - 8591 பேரும், பெப்ரவரி மாதத்தில் - 6638 பேரும், மார்ச் மாதத்தில் - 7942 பேரும், மே மாதத்தில் - 7146 பேரும், ஜூன் மாதத்தில் - 6704 பேரும் சிகிச்சை பெற்றுள்ளதுடன், நாளொன்றுக்குச் சராசரியாக 300 பேர்வரை வெளிநோ யாளர் பிரிவில் சிகிச்சைபெற்று வரு கின்றனர்.

இவ்வாறு பல ஆயிரம் மக்கள் நம்பியிருக்கும் இந்த வைத்தியசா லையைப் புனரமைப்புச் செய்து, புத்து யிரூட்டுவதற்கு உரியவர்கள் முன் வரவேண்டும். ❄

-குலசேகரன் சுகந்தன்
மீசாலை நிருபர்

# அமெரிக்க ரோந்துப் படையணி பக்தாத் வீதியில் தாக்கப்பட்டது!

## சேதமுற்ற காருக்குள் இருந்து குண்டுவெடிப்பு

(பக்தாத்)

மேற்கு பக்தாத்தில், நேற்றுக் காலை நடைபெற்ற குண்டுத் தாக்குதலில், ரோந்துசென்ற அமெரிக்கப் படைவீரர் ஒருவர் பலியானார். மேலும் இருவர் காயமுற்றனர்.

பிரதான வீதியில், சுமார் 20 அமெரிக்க கனரக வாகனங்கள் சென்றபோது, வீதியோரமாகக் கிடந்த சேதமடைந்த கார் ஒன்றினுள் இருந்து, திடீரென்று குண்டு வெடித்தது. இதன் போது - இறந்த அமெரிக்கப் படை வீரர், வாகனத்திலிருந்து தூக்கி வீசப்பட்டதை நேரில் கண்டதாக, சக படைவீரர்கள் தெரிவித்தனர்.

குண்டுவெடிப்பால் அதிர்ச்சியடைந்த படைவீரர் ஒருவர், தன்னிடமிருந்த இயந்திரத் துப்பாக்கியால்



பலியானவர் சடலம்.

சகட்டுமேனிக்குச் சுட்டதாகவும், மற்றோரு வீரர், வீதியிலிருந்து அழுது கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான அணியினர், நீண்டகாலமாக குவைத்தில் நிலைகொண்டிருந்த பின்னர், அண்மையில்தான் ஈராக்கிற்கு அனுப்பப்பட்டவர்களாவர்.

அண்மைக்காலமாக, ஈராக்கில் அமெரிக்கப் படை மீதான திடீர் தாக்குதல்களின் வரிசையில், இதுவும் ஒன்றெனத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவில் பெருவெள்ளம்; ஒரே நாளில் 100 பேர் பலி!


நீரில் மூழ்கிய கிராமம்.

இந்திய ஹிமாசலப் பிரதேசத்தில் ஏற்பட்ட கடும்மழை மற்றும் வெள்ளத்தால், கடந்த புதனன்று சுமார் 100 பேர் பலியாகியுள்ளனர். பலியானவர்களில் அநேகமானோர், மின்விநியோக மார்க்கம் ஒன்றில் பணிபுரிந்த ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று, அஸாம் பகுதியிலும் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இப்பகுதிக்கு உடனடி வெள்ள நிவாரண நிதியை விடுவிக்குமாறு, மத்திய அரசை அஸாம் அரசு கேட்டுள்ளது.

# பெண்கள் மீதான வன்முறை பக்தாத்தில் திடீர் அதிகரிப்பு!

ஈராக்கில், சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்ந்த பின்னர் - பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக, அமெரிக்க மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஈராக்கில், சிவில் நிர்வாகத்தைச் சீராக்க முடியதவர்களாக, அமெரிக்க அதிகாரிகள் இருப்பதையே, இந்த வன்முறைகளின் அதிகரிப்புக் காட்டுவதாக, இந்த மனித உரிமை அமைப்பு குற்றஞ்சாட்டுகிறது. பெண்கள் மீதான அதிகரித்துவரும் பாலியல் துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரணை நடத்துவதில் அசட்டை காட்டப்படுவதாகவும், இதனால் பெண்கள் வீடுகளை விட்டு வெளியே வரவே அஞ்சுகின்றனர் எனவும் அந்த அமைப்புத் தெரிவிக்கின்றது. நகரில் பாலியல் வன்முறை அதிகரித்துச் செல்வதுடன், வீதிகளில் - பகலில் கூட இளம்பெண்களைக் கடத்தும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.


பாதுகாப்பற்ற பக்தாத் பெண்கள்.

# ஆபிரிக்கத் தீவில் இராணுவப் புரட்சி



மேற்காபிரிக்காவின் தீவு நாடான சாவோ ரோமேயில், இராணுவம் - அரசைக் கைப்பற்றியுள்ளது. நேற்று அதிகாலை தலைநகரில், பரவலாக துப்பாக்கிச்சூடு மற்றும் குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டன.

முன்னாள் போர்த்துக்கீச காலனித்துவ நாடான சாவோ - ரோமேயில், மரியாடாஸ் நேவேஸ் என்ற பெண்மணியே பிரதமராவார். இவரும், இவரின் அமைச்சர்களும் - அதிகாலை நடந்த சதிப்புரட்சியில் கைதாகியுள்ளனர். புரட்சி நடந்த சமயம், அந்நாட்டு ஜனாதிபதி மெனீசஸ், நைஜீரியாவில் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

கொக்கோ மற்றும் எண்ணெய் வள நாடான ரோமே, கடந்த ஆண்டு அமெரிக்காவுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்ததன் மூலம் எண்ணெய் ஏற்றுமதியை அமெரிக்காவுக்குச் செய்து வந்தது.

சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவ அதிகாரி - சகல அரச ஊழியர்களையும் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லுமாறு பணித்துள்ளார்.

இவர், இத்தீவின் இராணுவ பாடசாலையின் முதல்வரான மேஜர் பெர்னாண்டோ பெரேரா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

### கொண்டொம் பற்றாக்குறை; எயிட்ஸ் அதிகரிப்பு!

ஆணுறைகளின் (Condoms) தட்டுப்பாடு காரணமாக உலகில் எயிட்ஸ் நோயின் தாக்கம் அதிகரிப்பதாக, ஐ.நா. மருத்துவ வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

பாரிஸில் நடைபெற்ற எயிட்ஸ் நோய் தொடர்பான மாநாட்டில், இது தொடர்பாகக் கருத்துக்கள் வெளிடப்பட்டன.

இத்திட்டங்களுக்கு - அரசுகள் அதிக நிதியொதுக்காவிட்டால், நிலைமை மேலும் மோசமடையலாம் என, இம்மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

### பிளேயர் மீது அதிகரிக்கும் குற்றச்சாட்டு

பொய்யான தகவல்களை வெளியிட்டு, ஈராக் மீது போர் தொடுத்ததாக, பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

கோடைகாலத்துக்கு முன்பான சபையின் கேள்வி நேரத்தில், அநேகமான பிரிட்டிஷ் எம்.பிக்கள் - இது குறித்தே கேள்விகளை எழுப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பிரான்ஸில் கடும் புயலினால் உல்லாசப் பயணிகள் பாதிப்பு!

## இதுவரை நால்வர் பலியாகினர்



பிரான்ஸில், கடந்த இரு தினங்களாக வீசிய கடும் புயலினால், நால்வர் பலியாகினர். 80 பேர் காயமடைந்தனர். மூவர் காணாமற்போயுள்ளனர். கடும் காற்று, மழையினால், தென் மற்றும் மேற்குப் பிரான்ஸின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. 40 வயதான டச்சு உல்லாசப்பயணி ஒருவரும், பதினொரு வயதான ஜேர்மன் சிறுமி ஒருவரும் பலியானவர்களில் அடங்குவர்.

பாதிக்கப்பட்ட பகுதிகள் - உல்லாசப் பயணிகளுக்கான பிரதேசங்கள் என்பதால், அவற்றிலிருந்த சுமார் 1000 உல்லாசப் பயணிகள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# பெண் புகைப்படப் பத்திரிகையாளர் ஈரான் சிறையில் அடித்துக் கொலை


கொல்லப்பட்டவர் படத்துடன் உறவினர்.

ஈரானில், கனேடிய - ஈரானிய கலப்பினப் பத்திரிகையாளர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். தெஹ்ரானில் உள்ள சிறைச்சாலை ஒன்றுக்கு வெளியே வைத்து இவர் கைதாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தாக்குதலால், மூளைப்பகுதி செயலிழந்தமையே மரணத்துக்குக் காரணமாகக் கூறப்படுகிறது. தெஹ்ரானிலுள்ள எவின் சிறைச்சாலையைப் படம்பிடித்துக்கொண்டிருந்தபோது, 54 வயதான கஸீமி என்ற இவர், கடந்த மாதம் 23 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் - இவர், மயக்கமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, அவரின் மூளை செயலிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில், வலிப்பு நோய் கண்ட கஸீமி, திடீரென மயக்கமடைந்தார் எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இவர் சிறைக்குள் வைத்தே அடித்துக் கொல்லப்பட்டதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இம்மரணம் குறித்து உடன் விசாரணை நடத்த தனது நான்கு அமைச்சர்களை, ஈரானிய ஜனாதிபதி கதாமி பணித்துள்ளார்.


## யாழ்ப்பாண மாநகரசபை
## அறிவித்தல்

கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளுக்கு மீள்கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

01. குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல: 2,5
02. நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை இல. 1
03. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 2

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
2003.07.16

(சி-1242)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


# மாயமான 'இணைய' காதல் ஜோடி நலமாக இருப்பதாக அறிவிப்பு!


ஷிவோன்.

(லண்டன்)

முன்னாள் அமெரிக்க அதிரடிப்படை வீரர் ஒருவருடன் மாயமான, 12 வயதான பிரிட்டிஷ் மாணவி, தான் இப்போதைக்கு வீடு திரும்பப்போவதில்லை என, தொலைபேசியில் - தனது தாயாரிடம் கூறியுள்ளார்.

இணையத்தளம் மூலம் சந்தித்த 31 வயதான பேகர் என்ற அமெரிக்க அதிரடிப் படை வீரரும- ஷிவோன் என்ற 12 வயது பிரிட்டிஷ் மாணவியும் நான்கு நாட்களுக்கு முன் தலைமறைவாகியுள்ளனர். இவர்களை பிரிட்டிஷ் மற்றும் ப்ரெஞ் பொலிஸார் தேடிவருகின்றனர்.

இவர்கள் இருவரும் தற்போது இருக்கும் இடம் பற்றி எதுவும் அறிவிக்கவில்லை என்றாலும், தாம் இருவரும் பாதுகாப்பாக இருப்பதாக தமது உறவினர்களுக்கு அறிவித்துள்ளனர். இருவருக்கும் இடையே பல மாதங்களாகவே நேரடி உறவு இருந்திருக்கவேண்டும் என, இவ்விவகாரத்தை விசாரணை செய்துவரும் பொலிஸ் அதிகாரி பீற்றர் மேசன் தெரிவித்தார்.

இதேவேளை - பேகர், இறுதியாக, பிரான்ஸ் செல்வதற்காக - மஞ்செஸ்டர் விமான நிலையத்தில் காத்திருந்ததை, விமானநிலைய கண்காணிப்புக் கமராக்கள் படம் பிடித்துள்ளன. இதைத் தொடர்ந்து - இவர்களைத் தேடி, பிரிட்டிஷ் பொலிஸ் குழுவொன்று பிரான்ஸ்


ஷிவோனின் பெற்றோர்.

சென்றுள்ளது. ஆனால் - அந்த ஜோடி, மற்றோர் விமானத்தில் உடனடியாக பிரான்ஸை விட்டு வெளியேறிவிட்டதாக ப்ரெஞ்சுப் பொலிஸார் நடத்திய விசாரணையில் இது தெரியவந்தது.

ஒருவருட காலமாக இருவரும் 'ஈ - மெயில்' மூலம் தொடர்பு கொண்டு, பின்னர் - தொலைபேசி மூலம் உரையாடி, இறுதியில் கடந்த சனியன்றே நேருக்குநேர் சந்தித்துள்ளனர் என, பூர்வாங்க விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மீள்குடியேறிய முஸ்லிம்களுக்கு உதவிகள் இன்னும் கிட்டவில்லை

## முஸ்லிம் மக்கள் பணிமனை குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேறிவரும் முஸ்லிம் மக்களிற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள்- இதுவரை எந்தவிதமான உதவிகளையும் செய்யவில்லையென, முஸ்லிம் மக்கள் பணிமனையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். செயலக அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே, அவர்கள் இக்குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

மீள்குடியேறிவரும் முஸ்லிம் மக்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லை. இந்தநிலையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் இவர்களுக்கு எந்தவித மனிதாபிமான உதவிகளையும் செய்யவில்லையென, முஸ்லிம் மக்கள் பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் மக்கள் பணிமனையைச் சேர்ந்த தலைவர் மௌலவி சுஃபியான், செயலாளர் ஜவ்பர் ஆகியோர் நேற்று செயலக உயரதிகாரிகளைச் சந்தித்தனர்.

மக்கள் பணிமனையில் நடைபெற்ற இச்சந்திப்பில்- மீள்குடியேறிய முஸ்லிம் மக்களை அவர்களது சொந்த வீடுகளில் குடியேற்றுதல், வீடுகளைப் புனரமைத்தல், கடன் மற்றும் நிவாரண உதவிகளை பெற்றுக் கொடுத்தல், வாக்காளர் பதிவை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

யாழ்.பிரதேச செயலர் செந்தில்நந்தன், யாழ்.தேர்தல் உதவி ஆணையாளர் நடராஜா, மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த வேழினி, கிராம அலுவலர்கள் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நேற்று மாலை, முஸ்லிம் மக்கள் பணிமனை -குழுவினர் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரையும் சந்தித்துப் பேசினர். (ரா)

# மதுரையில் கிராமவாசிகளுடன் மோதல் மன்னாரைச் சேர்ந்த நால்வர் காயம்

(மதுரை)

தமிழகம் - மதுரை மாவட்டத்தில் கிராமவாசிகளுக்கும், இலங்கை அகதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதல் சம்பவத்தில் -மன்னாரைச் சேர்ந்த நான்கு பேர் காயமடைந்தனர். 14 பேர் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 9 மணிக்கு மதுரை மாவட்ட திருவாதவூரில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், மன்னார் பேசாலையைச் சேர்ந்த செபஸ்தியான் (வயது 20), நிக்ஷன் (வயது 25), கெனடி (வயது 23), றொபேட் (வயது 24) ஆகிய நான்கு பேரும் காயமடைந்த நிலையில் மதுரை அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - மோதல் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 14 இலங்கை அகதிகள், மதுரை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# அரியாலை மனித புதைகுழி; யாழ்.நீதிமன்றில் அறிக்கை

அரியாலையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட - மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக, விரைவில் யாழ்.நீதிமன்றில் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரியாலையில் கண்ணிவெடி அகற்றும் பணி நடைபெறும்போது, இப்புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. இப்புதைகுழி தொடர்பான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய பூரண அறிக்கை ஒன்று இருவாரங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி - யாழ். நீதிமன்றம், பொலிஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறது. மிக விரைவில் இவ்வறிக்கை பொலிஸாரால் யாழ். நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இந்த அறிக்கை கிடைத்ததும், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து யாழ். நீதிமன்றம் தீர்மானம் எடுக்கும் என்று தெரியவருகிறது.

# மறைந்த நாதஸ்வர மேதைக்கு பொது அமைப்புக்கள் அஞ்சலி

நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதனின் மறைவையொட்டி, பிரமுகர்களுடன் அரசியற்கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் பலவும் அனுதாபச் செய்திகளை வெளியிட்டுள்ளன.

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு, அகில இலங்கை கம்பன் கழகம் ஆகியவற்றுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வலி. வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சிவமகாராசா, அமைச்சர் மகேஸ்வரன் ஆகியோரும் தமது அனுதாபச் செய்திகளை வெளியிட்டுள்ளனர். காலஞ்சென்ற என்.கே.பத்மநாதனின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

# சுவிஸ்-யாழ்.பல்கலைக்கழகம் உதைபந்தாட்டப் போட்டி இன்று

யாழ். பல்கலைக்கழக அணிக்கும், புலம்பெயர்ந்து சுவிஸில் வசிக்கும் ஈழத்தமிழர் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டம் - இன்று, யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் இடம்பெறும் இச்சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, சுவிஸ் அணியின் பயிற்றுனர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் பின்னர் - மாலை 4 மணிக்கு நாவாந்துறை சென். மேரீஸ் அணியின் 17 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கும், புலம் பெயர்ந்து சுவிஸில் வசிக்கும் 17 வயதிற்குட்பட்ட ஈழத்தமிழர் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டமும் இன்று இடம்பெறவுள்ளது.

# இணுவில் விபத்தில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக, நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் உடுவிலைச் சேர்ந்த ஒருவர் பலியானார்.

இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக, நேற்றிரவு 9 மணியளவில் மோட்டார் சைக்கிளும், எல்ப வாகனமும் விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் பலியானார்.

உடுவிலைச் சேர்ந்த இராமலிங்கம் கேசவன் (வயது 39) என்பவரே, ஸ்தலத்திலேயே உயிரிழந்தவராவார். (121)

# பொலிஸ் தற்கொலை

தனக்குத்தானே துப்பாக்கியால் சுட்டு மரணமடைந்ததாகத் தெரிவித்து பொலிஸார் ஒருவரின சடலமொன்று நேற்றிரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அனுராதேவா வசந்த (வயது 36) என்ற பொலிஸாரே மரணமடைந்தவராவார்.

சடலத்தின் நெஞ்சுப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது. (121)

# எவரோ விட்ட தவறினால் நாடு இரண்டாகியுள்ளது!

## பௌத்த தேரர் கடிதம்

(கொழும்பு)

யார்யாரோ செய்த தவறுகளினால், இன்று நாடு இரண்டுபட்டுக் கிடக்கிறது. வடபகுதி தமிழ் மக்களின் உண்மையான மன உணர்வுகளை நாம் தென்பகுதி மக்களுக்கு எடுத்துச் சொல்லி வருகிறோம்- இவ்வாறு, சமாதானத்துக்கும் நீதிக்குமான அமைப்பின் பிரதம குருவான, டெவகுக சந்திரானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்துகொண்ட இவர்- அதற்காக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு நன்றி தெரிவித்து அனுப்பிவைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

துறவிகளாகிய தாம் 'பொங்கு தமிழ்' நிகழ்விற்கு வருகைதந்த சமயம் தமக்கு வழங்கப்பட்ட வரவேற்புக்கும் அரவணைப்புக்கும் நன்றி தெரிவித்திருக்கும் அவர், வடக்கின் உண்மைநிலை குறித்து தாம் தெற்கில் உள்ள மக்களுக்கு தெளிவுபடுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு -தூத்துக்குடி கப்பல் சேவை ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்காக, இந்திய கப்பல் துறை அமைச்சர் சத்ருக்கன் சின்ஹா அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ளார்.

கொழும்பு- தூத்துக்குடி கப்பல் சேவை தொடர்பான உடன்பாட்டைக் கைச்சாத்திடுவது குறித்து, இவர் கவனம் செலுத்துவார். இதேவேளை, தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் படகுச் சேவையை நடத்துவது குறித்தும், அதிகாரிகள் கவனம் செலுத்தவுள்ளனர்.

# புளொட் அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு!

திருகோணமலையில் புளொட் அலுவலகம் மீது நேற்றிரவு கைக்குண்டுத்தாக்குதல் நடைபெற்றது. இந்தச்சம்பவத்தில் இரு பொலிஸார் காயமடைந்தனர்.

நேற்றிரவு 9 மணியளவில் - திருகோணமலை மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள புளொட் அலுவலகம் மீதே இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றது. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர், இந்த அலுவலகம்மீது கைக்குண்டை வீசியதாகத் தெரியவருகிறது. (9,10)

# முதல் தாக்குதல்...

இந்நிகழ்வில் இரண்டு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. 'களம் கலங்கும்- காலக்கருவி' என்ற நூலை படையணியின் சிறப்புத் தளபதி நகுலன் வெளியிட்டு வைக்க, தமிழீழ தேசியத் தலைவர் பெற்றுக்கொண்டார். 'அக்னி வீச்சு - மூன்று' என்ற படையணியின் காலாண்டு சஞ்சிகையை நூலாசிரியர் மிரேஷ் வெளியிட்டு வைக்க, தமிழீழ தேசியத் தலைவர் பெற்றுக்கொண்டார். அத்துடன் - தமிழீழ தேசியத் தலைவருக்கு, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சார்பான நினைவுப் பரிசினை, தளபதி கோபித் வழங்கினார்.

லெப். சீலனின் 20 ஆம் ஆண்டு நினைவினையொட்டி, படையணிப் போராளிகளுக்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, தமிழீழ தேசியத் தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

# இடைக்கால...

வழங்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்குமா என்பதுபற்றித் தெரியவரவில்லையென அவதானிகள் கூறுகின்றனர்.

# கடல் மோதல்கள்...

செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும், கண்காணிப்புக் குழுவின் சார்பில் - ரெலவ்சன், கண்காணிப்புக்குழுவின் ஊடகப் பேச்சாளர், யாழ்ப்பாணத்திலுள்ள கடற்கண் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது - கடற்புலிகளின் வளர்ச்சி தொடர்பாகவும், யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த காலத்திற்குப் பின்னர் கடற் புலிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேணல் சூசை எடுத்துவிளக்கினார்.

பின்னர் - முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத்திற்குச் சென்ற கண்காணிப்புக் குழுவின் தலைவர், அங்கு கூடியிருந்த மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், தாம் கடற்படையினரால் தாக்கப்படுவது தொடர்பாகவும், தமது வலைகள் - சிங்கள மற்றும் முஸ்லிம் மீனவர்களால் அறுத்தெடுக்கப்படுவது தொடர்பாகவும் கண்காணிப்புக் குழுவின் தலைவரிடம் கடற்தொழிலாளர்கள் முறையிட்டனர்.

மாலை மூன்று மணியளவில், கேணல் சூசை, கடற்புலிகளின் தாக்குதல் படகுகளில் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தலைமையிலான குழுவினரை ஏற்றி, தமது படகுகள் தொடர்பாக விளக்கமளித்தார்.

மாலை 5 மணியளவில் கிளிநொச்சி திரும்பிய கண்காணிப்புக் குழுவினர், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனைச் சந்தித்துவிட்டு வவுனியா திரும்பினர்.

கேணல் சூசையுடனான சந்திப்புப் பற்றி, பின்னர் கருத்து வெளியிட்ட ரெலவ்சன்,

கடலில் உள்ள நிலைமைகள் பற்றித் தான் அறிந்துகொண்டதாகவும் கடலில் கண்காணிப்புக் குழுவினரின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

கடற்படையினரின் போர்நிறுத்த மீறல்கள் குறித்து கேணல் சூசை தன்னிடம் விரிவாக எடுத்துரைத்ததாகவும், சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் இரு வணிகக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டது போன்ற போர்நிறுத்த மீறல்ச் சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாது இருக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டதாகவும் ரெலவ்சன் மேலும் கூறினார்.

அடுத்த வாரம் கடற்கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், தளபதி கேணல் சூசையுடன் சந்திப்பொன்றை நடாத்தி, கடல் நடவடிக்கை குறித்து ஆராய்வார்கள் என்றும் ரெலவ்சன் மேலும் தெரிவித்தார். (க)




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.